முகூர்த்த பட்டு புடைவைக்கு
சகல விதமான
காஞ்சிபுரம் சேலை
பட்டு வேட்டி கூறை சாறி
பனாரிஸ் சேலைகளுக்கும்
சிறந்த ஒரே இடம்
கோபிகா
ஆடை அகம்
4, சிறப்பு அங்காடி,
உட்புறம்,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

ராகமாலிகா
என இயங்கி வந்த
எமது ஸ்தாபனம்
கோபிகா
ஆடை அகம்
என பெயர்
மாற்றப்பட்டுள்ளது
4, சிறப்பு அங்காடி,
உட்புறம்,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 22 வெள்ளிக்கிழமை (05 - 05 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 159

# இந்தியாவிடமிருந்து இராணுவ உதவி ஸ்ரீலங்கா அரசாங்கம் கோருகின்றது!

## பிரதமர் நரசிம்மராவிடம் நேரில் வேண்டினார் ஜனாதிபதி சந்திரிகா

கொழும்பு, மே 5

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போராடுவதற்காக இந்தியாவிடம் இராணுவ உதவிகளைக் கோரியிருக்கிறது ஸ்ரீலங்கா அரசு.

"சார்க்" உச்சிமாநாட்டில் பங்குபற்றுவதற்காக புதுடில்லி சென்றிருந்த ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த செவ்வாய்க்கிழமை பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்துப் பேசியபோது இக்கோரிக்கையை விடுத்ததாக செய்தி ஏஜென்ஸி ஒன்று அறிவித்தது.

ஸ்ரீலங்காவுக்கு இந்தியா வழங்கக்கூடிய இராணுவ உதவிகள் பற்றிய முழு விவரங்களும் இன்னும் தெரியவரவில்லை என்றும் அச்செய்தி நிறுவனம் குறிப்பிட்டது.

இராணுவத்தினருக்குப் பயிற்சி வழங்குதல், இந்திய—ஸ்ரீலங்கா கடல் எல்லையில் இந்திய கடற்படையினருடன் சேர்ந்து ஸ்ரீலங்காக் கடற்படை கூட்டு ரோந்து செய்வதன்மூலம் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற உதவிகளை ஸ்ரீலங்கா கோரியிருக்கக்கூடும் எனக் கருதப்படுகின்றது.

இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சி அளித்தல், இந்திய — இலங்கைக் கடலில் ரோந்து புரிதல் என்பன மூலம் விடுதலைப் புலிகளை ஒடுக்க இந்தியா உதவக்கூடுமென இந்திய இராணுவ ஆய்வு மையத்தின் மேஜர் ஜெனரல் பெனர்ஜி கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கு இந்திய இராணுவ உதவி சாத்தியம் என்று பி.பி.ஸி கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி டட் தெரிவித்தார்.

ஸ்ரீலங்காப் படையினருக்கு பயிற்சி வழங்கும் உதவியை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இந்தியா ஏற்கனவே வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்காவுக்கு 1987 இல் நேரடி இராணுவ உதவி வழங்கப்போய் தனது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியில் சிக்கிய சிப்பாயின் கால் துண்டிப்பு!

மட்டக்களப்பு, மே 5

மட்டக்களப்பு சித்தாண்டியில் மிதிவெடியில் சிக்கி சிப்பாய் ஒருவர் காலை இழந்தன்னார். ஏ. ஏ. சந்திரபால என்ற சிப்பாயே காலையிழந்தவர் ஆவார்.

இதேவேளை கரடியனாறுப் பகுதியிலும் பொலிஸார் ஒருவர் மிதிவெடியில் சிக்கி காலை இழந்துள்ளார்.

(ஒ-7)

## வெடிகுண்டுடன் சைக்கிள்: மட்டு. நகரில் பரபரப்பு!

கொழும்பு, மே 5

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக கடந்த செவ்வாயன்று நண்பகல் கவனிப்பாரற்ற நிலையில் காணப்பட்ட சைக்கிள் ஒன்றை சோதனையிட்ட பொலிஸார் அதன் 'சீற்'றின் கீழ் இருந்த குண்டு ஒன்றைக் கண்டுபிடித்தனர்.

பின்னர் அந்தக் குண்டை பொலிஸார் பாதுகாப்பாக வெடிக்க வைத்தனர்.

வீதியோரம் அந்த சைக்கிள் நீண்ட நேரமாக கவனிப்பாரற்றுக் கிடப்பதைக் கண்ட அப்பகுதி கடை உரிமையாளர்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர்.

சிறுவன் ஒருவனே அந்த சைக்கிளை அப்பகுதியில் விட்டுச் சென்றான் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குண்டை கண்டு பிடித்த பொலிஸார் அதனை துப்பாக்கியால் சுட்டு வெடிக்க வைத்தனர்.

இச்சம்பவத்தை அடுத்து மட்டு நகரினுள் பிரவேசித்த சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பனவற்றை பொலிஸார் தீவிர சோதனைக்கு உட்படுத்தினர்.

இதேவேளை —

மட்டக்களப்பு நகருக்கு அருகே புன்னைச்சோலை, அமிர்தகழி ஆகிய இடங்களில் பொலிஸார் தேடுதல் நடத்தியுள்ளனர்.

(ஐ-5)

## கைக்குண்டு வெடித்து மணலாற்றில் சிப்பாய் பலி

### படையினர் 4 பேர் காயம்

மணலாற்றுப் பகுதியில் மொறவதொடுவவில் படையினரின் காவலரணில் கைக்குண்டு ஒன்று வெடித்ததில் சிப்பாய் ஒருவர் பலியானார். மேலும் 4 படையினர் காயமடைந்தனர்.

— இவ்வாறு பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

(ஒ-7)

## புல்மோட்டையில் தாக்குதல் இராணுவ சிப்பாய் பலி!

கொழும்பு, மே 5

திருகோணமலை மாவட்டம் புல்மோட்டைப் பகுதியில் உள்ள படையினரின் அவதானிப்பு நிலை ஒன்றின் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதல் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-7)

## புலிகள் வசம் நவீன ஆயுதங்கள்: நரசிம்மராவ் கவலை தெரிவிப்பு

புதுடில்லி, மே. 5

இலங்கையில் அரசு அல்லாத அமைப்புக்களிடம் ஆபத்தான ஆயுதங்கள் குவிந்திருப்பது பயங்கரமான ஒரு விடயமாகும் எனத் தெரிவித்து கவலை வெளியிட்டிருக்கிறார் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ்.

இலங்கையில் இரண்டு இராணுவ விமானங்களை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தியிருப்பது குறித்து புதுடில்லியில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"சார்க்" அமைப்பின் தலைமைப் பதவியை கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்றுக்கொண்ட பின்னர், பத்திரிகையாளர்களின் கேள்வி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியா நகரப் பகுதியில் எண்மர் இரு நாட்களில் சுட்டுக் கொலை!

— ஓமந்தையில் இருந்து உதயன் விசேட செய்தியாளர் —

ஓமந்தை, மே 5

வவுனியா நகரில் கடந்த திங்கள் இரவும், செவ்வாய் இரவும் எட்டுப்பேர் சுட்டுக் கொல்லப்பட்டதாக ஓமந்தைக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் வவுனியா நகரில் பெரும் பதற்றம் நிலவுகின்றது.

கடந்த திங்களன்று இரவு சுட்டுக் கொல்லப்பட்டு வீசப்பட்ட சடலங்கள் செவ்வாயன்று காலையில் கண்டுபிடிக்கப்பட்டன.

ரி 56 ரக துப்பாக்கிகளினாலேயே மேற்படி மூவரும் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

பண்டாரிக்குளம் — குழாங்குளம் பகுதியில் ஒரு சடலமும் —

குடியிருப்பு — பூந்தோட்ட வீதி வயல் வெளியில் ஒரு சடலமும் கிடக்கக் காணப்பட்டன.

வவுனியா — மன்னார் வீதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு வான் பிராந்தியத்தில்

## போக்குவரத்து விமானம் பறப்பதற்கும் தடை!

### இந்தியச் சேவையும் ரத்து!!

கொழும்பு, மே 5

வட பிராந்திய வானில் பயணிகள் போக்குவரத்து விமானம் பறப்பதை ஸ்ரீலங்கா அரசு தடைசெய்துள்ளது.

விமானங்கள் ஏவுகணைத் தாக்குதல்களுக்கு இலக்காகலாம் என அஞ்சப்படுவதாலேயே ஸ்ரீலங்கா அரசு இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இந்தியாவுக்குச் சொந்தமான இந்தியன் எயர்லைன்ஸ் விமானமும் வடபகுதி வான்பரப்பில் பறப்பதை நிறுத்தியுள்ளதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

(ஒ-4)

## பூநகரி நிபந்தனையாக இருக்கும்வரை பேச்சை ஆரம்பிப்பது சாத்தியமில்லை

### லக்ஷ்மன் கதிர்காமர் பி.பி.ஸி.க்கு பேட்டி

புதுடில்லி, மே 5

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு பூநகரி தொடர்ந்து ஒரு நிபந்தனையாக இருக்குமானால் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க முடியும் என நான் நினைக்கவில்லை.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு கூறினார்.

சார்க் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள புதுடில்லி சென்றிருந்த லக்ஷ்மன் கதிர்காமர் பி பி ஸிக்கு அளித்த பேட்டியின் சில பகுதிகள் வருமாறு:-

கேள்வி: ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சார்க் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளவென இந்தியா வந்திருந்தபோது இந்திய அரசிடமிருந்து ஏதாவது உதவிகளை கேட்டுள்ளாரா?

பதில்: இதுபற்றி என்னால் எதுவும் கூறமுடியாது நான் இரண்டு நாட்களில் தாயகம் திரும்பும் வரை ஜனாதிபதிக்கும் இந்தியப் பிரதமருக்கும் இடையில் ஏற்பட்ட சந்திப்புப் பற்றி எதுவும் கூறாமல் இருப்பதே எனது கொள்கை

கேள்வி: இலங்கையில் இப்போது உருவாகியுள்ள நிலைமை மிகவும் கவலைக்குரியது போர் நிறுத்தம் குறித்த பழைய நிலைக்கு திரும்ப என்ன செய்யமுடியுமென அரசு கருதுகிறது?

பதில்: பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதில் நாம் முற்றாக உறுதியாக

[6 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகள் பற்றி தகவல் பெற சென்றவர் சுட்டுக்கொலை

கொழும்பு, மே. 5

மூதூரில் கடந்த செவ்வாய்க்கிழமை சஜித் பிரேமரத்ன (29 வயது) என்ற பொலிஸ் கான்ஸ்டபிள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றி தகவல்களையும் படங்களையும் தருவதாக கூறி அழைத்துச் சென்று இவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

(ஒ-7)

### மட்டக்களப்பில் கடந்த திங்கள் இரவு

## பல ட்ரான்ஸ்போமர்கள் சுட்டு சேதமாக்கப்பட்டன

### கிராமங்கள் பல இருளில் மூழ்கின

கொழும்பு, மே 5

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் கடந்த திங்கள் இரவு மூன்று மின்சார ட்ரான்ஸ்போமர்கள் துப்பாக்கியால் சுட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளன.

அதேபோன்று வந்தாறுமூலை, சந்திவெளி ஆகிய இடங்களிலும் இரு ட்ரான்ஸ்போமர்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

ட்ரான்ஸ்போமர்கள் சுட்டு சேதப்படுத்தப்படும் சம்பவங்கள் கடந்த சில நாட்களாக இடம்பெற்று வருகின்றன.

இதனால் மட்டக்களப்பின் சில கிராமப் பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன.

மின்சாரசபை அதிகாரிகள் சம்பவம் நடைபெற்ற இடங்களுக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

(ஐ-5)

## தற்கொலைத் தாக்குதல் நடத்த 80 கரும்புலிகள்

### கொழும்புக்குள் ஊடுருவலாம்

கொழும்பு, மே. 5

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தற்கொலைத் தாக்குதல் பிரிவைச்சேர்ந்த எண்பது கரும்புலிகள் கொழும்பில் தாக்குதலுக்குத் தயாராக இருப்பதாக புலனாய்வு வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புப்பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இதேவேளை —

கடந்த ஞாயிறு, திங்கள், செவ்வாய் ஆகிய மூன்று நாட்களும் பொலிஸாரும், இராணுவத்தினரும் சேர்ந்து கொழும்புக்கும் நீர்கொழும்புக்கும் இடையில் கொழும்பு விசால பிரதேசத்தில் நடத்திய தேடுதலில் முன்னூறுக்கும் அதிகமான தமிழர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அப்பத்திரிகை தெரிவித்தது.

இதே சமயம் —

வெள்ளவத்தைப் பொலிஸார் கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய இருநாட்களிலும் வெள்ளவத்தையில் உள்ள 26 லொட்ஜ்களில் நடத்திய தேடுதல் வேட்டையில் சுமார் நூறு தமிழர்கள் கைதுசெய்யப்பட்டனர்; இவர்கள் மேல் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் —

கொழும்பு பம்பலப்பிட்டி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கிலும் விமான நடமாட்டம் இல்லை! மட்டு-கொழும்பு விமான சேவை ரத்து!

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளால் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவங்களைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்திலும் விமானங்கள் பறப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கு வான் பரப்பில் கடந்த சில நாட்களாக விமானங்கள் எதும் சஞ்சரிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கான விமான சேவைகள் எதுவும் கடந்த சில நாட்களாக நடைபெறவில்லை.

இதனால் கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு அவசர பயணம் மேற்கொள்ளும் படை அதிகாரிகளும், அரச அதிகாரிகளும் தரை வழியாகவே சென்று வருகின்றனர்.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு செல்வதற்காக விமான சேவையை எதிர்பார்த்து சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் காத்திருப்பதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

(ஐ)

## மட்டு. கிரான் குளத்தில் அதிரடிப்படை மீது சூடு

கொழும்பு, மே 5

மட்டக்களப்பு மாவட்டம் கிரான்குளம் பகுதியில் கால்நடையாக ரோந்து சென்று கொண்டிருந்த விசேட அதிரடிப்படையினர் மீது விடுதலைப்புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமைச் செயலகம் நேற்று அறிவித்தது.

கிழக்கில் படையினர் மீது புலிப் போராளிகளின் தாக்குதல்கள் கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

(ஒ-7)

## கொழும்புத் துறைமுகத்துக்குள் புலிகள் நுழைந்து தாக்கலாம்

### இராணுவ வட்டாரங்களில் அச்சம்

கொழும்பு, மே. 5

தலைநகர் கொழும்பின் துறைமுகத்தில் தரித்து நிற்கும் கடற்படைக் கப்பல்கள் மீதும் தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகள் திட்டமிடுவதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

புலிகளின் தொலைத் தொடர்புகளை இராணுவப் புலனாய்வுப் பிரிவு இடைமறித்துக் கேட்டிருப்பதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

"நீருக்கு கீழாக வந்து எமது படகுகளைத் தாக்க விடுதலைப் புலிகள் முயலக்கூடும். இதற்கான ஆபத்தும் உண்டு." — இவ்வாறு படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(உ)

### கொகுவல பகுதியில் கைதான

## இளம தமிழ்ப் பெண் சயனைட் அருந்தி மரணம்

கொழும்பு, மே. 5

நுகேகொடவுக்குச் சமீபமாகவுள்ள கொகுவலஎன்ற இடத்தில் 24 வயதுடைய இளம் பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்த போது அவர் சயனைட் அருந்தி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொகுவலவில் வீடு ஒன்றில் தங்கியிருந்த போதே இந்தப் பெண் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சயனைட் அருந்தி உயிரிழக்க, அந்தப் பெண் விடுதலைப் புலிகளின் மகளிர் படையைச் சேர்ந்தவர் எனச் சந்தேகிக்கப்படுவதாக செய்தி ஏஜென்சி ஒன்று தெரிவித்தது.

(ஒ 4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


**விற்பனைக்கு**

நல்லின யமுனாப்பாரி ஆடும், ஆறுமாத சணல் மறிக் குட்டியும் விற்பனைக்குண்டு. 51, சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி, (நோசில் ஹோம் முன்பாக), யாழ்ப்பாணம். (8515)

எம்மிடம் 16' நீளமும், 13' அகலமும் கொண்ட காப்பர் (நிலவிரிப்பு சாம்பல்), லேடீஸ் சைக்கிள் (Hero) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 154, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம். (சி-1352)

**வீடு விற்பனைக்கு**

அராலி வடக்கு இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ள 3 பரப்புடைய வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். ப. ஆனந்தம், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. (8518)

**தேவை**

புடைவை வியாபார ஸ்தாபனத்திற்கு பில் போட்டு வியாபாரம் செய்யக்கூடிய ஒரு பெண் தேவை. நேரில் வரவும். தொடர்பு: த சகி சரப்பின்னையும் மைந்தரும், இல 21, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம் (36496)

**நமர் சில்**

கொழும்பு உறவில் மூன்று நாட்களில் நமர் சில் செய்து கொள்ளவும். பிளாஸ்டிக் நேம் போர்ட், நமர் பிளேட் விளம்பர போர்ட் சுவர்ச்சித்திரம் அமைக்கவும் தொடர்பு கொள்ளவும் — "விமர்" ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் (ஜனியார் வைத்தியசாலை முன்) [36498]

**SPOKEN ENGLISH**

Spoken English with Grammar கற்பிக்கப்படுகிறது. V. N. Kandasamy A I B. Part - I London/ Inter (London) Dip - in - English. இல. 87, திருநெல்வேலி றோட், (றிலீஸ் கடையருகு சமீபமாக), கொக்குவில். [36523]

**விஸ் ஸன்றாஸ்**

வாஹினி, மட்றாஸ் நிறுவனங்கள் பார்ப்பதற்கு TV. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல், T.V. டெக், றேடியோ, மணிக்கூடு களை திருத்திக்கொள்வதற்கு விஸ் டிக்கா வார் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-1350]



**கணக்கியல் பிரத்தியேக வகுப்பு**

ஆரம்பம் 07-05-95

ஞாயிறு மாலை 5.00 மணி

க. ஸ்ரீ B Com (Hons)
393/47 கோவில் வீதி நல்லூர் யாழ்ப்பாணம்

குறிப்பு: குறிக்கப்பட்ட அளவு மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட இருப்பதனால் அனுமதிகளை முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும் [சி/995]



**கணக்கியல் பிரத்தியேக வகுப்பு**

**A/L 97**

ஆரம்பம் 08 - 05 - 95
திங்கள் மாலை 5.00 மணி

**D. SAM**
76/2 கோவில் வீதி நல்லூர் யாழ்ப்பாணம்.

குறிப்பு: குறிப்பிடப்பட்ட மாணவர்கள் மட்டும் சேர்த்துக் கொள்ளப்பட இருப்பதனால் அனுமதிகளை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும் [36514]


**சோகிடம்**

வெளியூர் ஜெனன ஜாதகக் குறிப்பு உடன் எழுதிக் கொள்ள மற்றும் ஜாதகக் குறிப்பு பலன் பார்க்க ஸ்ரீமானவ விநாயகர் சோதிடநிலையம், இல. 158, கோவில் வீதி, நல்லூர். [36491]

**பற்சிகிச்சை பாதிப்பு**

வடமராட்சி, மே 5 பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் பற்சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைகள் பாதிக்கப்பட்டுள்ளன.
இப் பிரிவின் கடமையாற்றும் பல்வைத்திய நிபுணர் விடுமுறையில் சென்றுள்ளதால் பற்சிகிச்சைப் பிரிவு இயங்காதுள்ளது. (ஜ-173)


உ
நாவற்குழி
காதவாய்க்கால் சித்தி விநாயகர் ஆலய

## அலங்கார உற்சவமும்

பரிவாரகமூர்த்தி (வயிரவர்)

## கும்பாபிஷேகமும்

காலம்: இன்று 05 — 05 — 1995
(வெள்ளி) — 14 — 05 — 1995

பைரவர் பிரதிஷ்டை:
05 — 05 — 1995 வெள்ளி காலை
மணி 9.56 — மணி 10-56

ஆலய பிரதமகுரு
சிவஸ்ரீ தி. கிருஷ்ணமூர்த்திக்குருக்கள்
(ஆசிரியர் - குருசாமி வீதி, கைதடி)

பரிபாலனசபை,
நாவற்குழி, காதவாய்க்கால்
ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்.

[36508]



## சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டுமா?

எழுத, பேச, வாசிக்க
பரீட்சையில் சித்தியடைய நாடுங்கள்

**"A" LEVEL CENTRE**
1ST. LANE, POINTPEDRO ROAD,
JAFFNA.

ஆரம்பம்: **06 - 05 - 1995**
SAT & SUN 4.45 p.m.
Teacher **MISS A. ALISTA**

[சி-1345]


## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் அந்தோனி சவிரி**

பிறப்பு: 20 - 08 - 1924
இறப்பு: 05 - 05 - 1991

ஆண்டவரே முடிவில்லாத ஒளி இவர் மேல் பிரகாசிக்கக் கடவது சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

156, ஆம் கட்டை,
கண்டி வீதி,
கிளிநொச்சி

[36506]



தமிழ் & ஆங்கிலம்
தட்டச்சும் சுருக்கெழுத்தும்
புதிய வகுப்புக்கள்
ஆரம்பம்: 05 - 05 - 1995

விவரங்களுக்கு:
**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, ST PETER'S LANE,
JAFFNA.

[சி-1133]


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**செல்வன் கதிர்காமத்தம்பி ராஜு**

அன்னையின் மடியில்: 15 — 05 — 1969
இறைவனடியில்: 05 — 02 — 1995

தம்பியே ராஜு நீர் எமைப் பிரிந்து
மாதங்கள் மூன்று கடந்ததுவோ!
மாறாதையா உன் திருவுருவம்
மறவோமையா உன் பணி
பாசத்தின் பறப்பிடமே
உன் துயர் சேதி கேட்டு
ஓடி வந்த வேளையிலும்
உன் திரு முகத்தைக்கூடும் யாம் காணோமையா
உறவினர், நண்பர்கள் உணர்வலையில்
பங்கு கொண்டு
உன் பணி தொடர்வோமையா
உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கடந்த 5 - 2 - 1995 அன்று எதிர்பாராத விதத்தில் சிவபதமடைந்த எமது அன்புச் செல்வன் க. ராஜு அவர்களின் ஈமக்கிரியைகளின் போது சகல வழிகளிலும் எமக்கு உதவியளித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் மரணத்துயரில் பங்கு கொண்டு அரும் பணியாற்றிய அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்கான இன்று (5-5-1995) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி
— குடும்பத்தினர்

சி. கதிர்காமத்தம்பி,
(மயில்வாகனம்),
இல: 114/9 முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை.

[36505]


உ
சிவமயம்
சிறுப்பிட்டி
ஸ்ரீ மனோன்மணி அம்மன்
ஆலயம்

## சித்திரத்தேர்த் திருப்பணி பவளக்கால் நாட்டுவிழா

சிறுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய திராவிட மரபு முகபத்திர பவளவண்ண மணித் தேருக்கான பவளக்கால் யுகவருடம் சித்திரைத் திங்கள் வெள்ளிக்கிழமை இன்று (05-05-1995) காலை 8-30 — 10-20 மணிவரை உள்ள சுப முகூர்த்தத்தில் நாட்ட திருவருள் பாலித்துள்ளது.

சிற்பத் தேர் நிர்மாணிப்பு:
விஸ்வப்பிரம்மஸ்ரீ
செ. பாலச்சந்திரன் குழுவினர்
ஸ்ரீ காளிகா சிற்பாலயம்,
புத்தூர்.

★ அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர் ★

தேர்த்திருப்பணிச்சபை,
ஸ்ரீ மனோன்மணி அம்பாள் தேவஸ்தானம்.
சிறுப்பிட்டி,
05-05-95

விளம்பர அன்பளிப்பு:
ஸ்ரீகிருஷ்ணாஸ் கிரைண்டிங் மில்
சிறுப்பிட்டி.

(36524)



## கலை வர்த்தக கல்லூரி

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

**G. C. E. A/L 97**

புதிய பிரிவு
கலை வர்த்தக வகுப்புக்கள்
சனி, ஞாயிறு
எமது வழமையான ஆசிரியர் குழு
ஆரம்பம் 06 05 95
சனி காலை 8-00 மணி

— நிர்வாகி

(சி- 1144)



## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**A/L 97**

கலை, வர்த்தக வகுப்புக்கள்
நடைபெறுகின்றன.

பிரிவு II

ஆரம்பம்: **06 - 05 - 1995** (சனி)

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. உதயன் |
| கணக்கியல் | — திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | — பிரபல ஆசிரியர் |
| அளவையியல் | — திரு. S. S. மனோகரன் |
| இந்து சமயம் இந்து நாகரிகம் | — திரு. சோதி |
| புவியியல் | — திரு. வேலா |
| தமிழ் | — திரு. குழந்தை |
| அரசியல் | — திரு. சிவசேகர் |
| வரலாறு | — திரு. பிள்ளை |
| நாடகம் | — திரு. சத்தியா |

[சி-1335]



## வட இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி

**DIPLOMA IN COMPUTER PROGRAMMING BASIC LANGUAGE**

ஆரம்பம்

| வார நாள் / வார இறுதி நாள் | பிரிவு 1 | பிரிவு 2 |
|---|---|---|
| 05 05 1995 | 10-30 | 3 30 |
| 07 05 1995 | 9-00 | 4 00 |

★ சர்வதேச பாடத்திட்டத்திற்கு அமைய முற்றிலும் மாற்றி அமைக்கப்பட்ட பாடநெறி.
★ மாணவர்களின் வசதிக்கு ஏற்ப தனிக்குழு வகுப்புக்களுக்கு ஏற்பாடு செய்து தரப்படும்.
★ கூடிய செய்முறைப் பயிற்சியும் தவணை முறைக் கட்டண வசதியும்
★ சிறந்த மாணவர்களுக்கு மூன்று மாத கால இலவச உள்ளகப் பயிற்சி அளிக்கப்படும்.

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, ST. PETER'S LANE, JAFFNA.

[சி-1343]



## 25 ஆவது வெற்றி ஆண்டை நோக்கி இணையற்ற சேவையாற்றும்

O/L வகுப்புகளுக்கென தனி முத்திரை பதித்த நிறுவனத்தில்
மீண்டும் ஒரு பிரிவு

**O/L Day Class** மே - 5 முதல்

✶ வாரக்கில் 8 மணி நேர கணித வகுப்புகள் ✶ 6 மணி நேர விஞ்ஞான வகுப்புகள்
✶ சனி, ஞாயிறு நாட்களில் விசேடமான கணித பாட செயலமர்வுகள்

ESTD 1973 REGD № 1/7999
**The Express Institute** (RUPALA)
MATHS MR. T. VARATHARAJAH

[36521]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மகர யாழ் விருது' பெறும் சான்றோனுக்கு வாழ்த்து!

## சமூகப் பணியில் முழு ஈடுபாடு மிக்க நற் சேவையாளர் ஜெயகுலராஜா

ஆசிய மட்டத்திலே மெய்வன்மைத் துறையில் தங்கப் பதக்கம் பெற்றது மட்டுமல்லாமல் ஆசிய சாதனையை நிலைநாட்டிய நாகலிங்கம் எதிர் வீரசிங்கம் போன்ற மெய்வல்லுநர்களை உருவாக்கிய யாழ்ப்பாணம், 1980 களிலும் 1990 களின் முற்பகுதியிலும் மெய்வன்மைத் துறையில் சோர்வுற்றிருந்த வேளை —

அத்துறையை மிளிரச் செய்வதற்காக முனைப்புடன் பணியாற்ற வந்த விளையாட்டுத்துறை விரும்பிகளில் முக்கியமானவர் டாக்டர் ஜெயகுலராஜா.

சுமார் பன்னிரண்டு ஆண்டு காலம் வெற்றுத்தாளில் இயங்கி வந்த மெய்வல்லுநர் சங்கத்தின் இடத்துக்கு, உத்வேகமும், செயல் திறனும் மிக்க ஒரு சீரிய அமைப்பை உருவாக்கி, அதன் தலைமைப் பொறுப்பை ஏற்று,

> *அகில இலங்கைக் கம்பன் கழகம் டாக்டர் து. வி. ஜெயகுலராஜாவுக்கு இன்று ''மகர யாழ் விருது'' வழங்குவதையொட்டி இந்த வாழ்த்து மலர் இங்கு பிரசுரமாகின்றது'*

குறுகிய காலத்தில் மெய்வன்மைத் துறையில் விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் அவர்.

பாழ். விளையாட்டுத்துறை அவரிடம் இருந்து நிரம்ப எதிர் பார்க்கின்றது.

செயல் இழந்து அல்லது செயல் குலைந்து போயிருக்கும் பொது அமைப்புகளைப் பொறுப்பேற்று அவற்றை சீரிய முறையில் செயற்பட வழிகாட்டி — புத்துயிரூட்டி — உத்வேகம் கொடுத்து — சிறப்பாக இயங்கச் செய்வதில் வல்லவர் டாக்டர் ஜெயகுலராஜா.

### சமூகத்தின் நோய்களைக் களைபவர்

மனித உடலை மட்டுமல்லாமல் சமூக அமைப்புகளைப் பீடிக்கும் நோய்களைக் கண்டு பிடித்து - கிருமிகளை அழித்து அல்லது துரத்தி — தகுந்த மருந்துகள் கொடுத்து — சிகிச்சை வழங்கி — பிழைக்க வைக்கச் செய்வதில் கைதேர்ந்த மருத்துவர் ஜெயகுலராஜா.

அவரது சாதனைகள் இதற்குச் சான்று பகரும்.

### அலங்கரிக்கும் பதவிகள்

கிழக்கு மாகாணம் மட்டக்களப்புப் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்ட டாக்டர் ஜெயகுலராஜா வட மாகாணத்தில் நீண்டகாலம் மருத்துவ சேவை மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார். பல்வேறு பொது அமைப்புகளில் உயரிய



டாக்டர் ஜெயகுலராஜா

பதவிகளை வகிப்பதன் மூலம்– சர்ச்சைகளுக்கு அப்பாற்பட்ட வகையில் - அவர் சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. அவர் அலங்கரிக்கும் பதவிகள்.

★ யாழ் வை. எம். சீ. ஏ தலைவர்.
★ யாழ்: மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத் தலைவர்.
★ யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி முகாமையாளர்.
★ கைதடி நவீல்ட் பாடசாலை முகாமையாளர்.
★ ஆனைப்பந்தியில் உள்ள யாழ். தனியார் ஆஸ்பத்திரிகளின் மருத்துவப் பணிப்பாளர்.
★ அங்கிலிக்கன், மெதடிஸ்த, தென்னிந்திய திருச்சபை ஆகியவை அடங்கிய தேவாலய யூனியனின் தலைவர்.
★ தனியாக அமைக்கப்பட்டுள்ள மருத்துவ கல்வித் துறையின் வழிகாட்டி.
★ யாழ். றோட்டறிக்கழக உறுப்பினர். இன்னும் பல.

### சுய உற்பத்தியில் அதிக அக்கறை

வீட்டுத் தோட்டம், கால்நடை வளர்ப்பு போன்றவற்றில் மிகுந்த ஈடுபாடு காட்டுவதன் மூலம் எமது பிரதேசத்தின் சுய உற்பத்தியில் அதிக அக்கறை காட்டிவரும் அவர், வதிவிட வேளாண்மைப் போட்டிகளில் பல பரிசுகளையும் பெற்றவர்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்து சிறந்த முறையில் பங்காற்றி வரும் அதேவேளை, தமது தனித்துவத்தையும், தனக்குச் சரியெனப்பட்டதை அடித்துக் கூறி அதன் வழி செயற்படுவதையும் வாழ்வில் பேணி வருபவர் அவர் என்பது யாவரும் அறிந்ததே.

### மனித நேயப் பணிக்காக சிறை சென்றவர்

விடுதலைப் போருக்காக — தமது மனச்சாட்சிக்கு சரி

[4 ஆம் பக்கம் பார்க்க]

ரி. கே. வில்வராஜா
[உப தலைவர், யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்]

## நற்சேவையாளர்

வைத்திய கலாநிதி ஜெயகுலராஜா அவர்களுக்கு அகில இலங்கைக் கம்பன் கழகம் 'மகர யாழ்' விருது வழங்குவதை அறிந்து பெருமகிழ்வு அடைகிறோம்.

தகுதி வாய்ந்த பெரியார்களை அவர்களது வாழ்நாளில் கௌரவிப்பதே யுக்தி பூர்வமானதும் செய்ய வேண்டியதுமாகும்.

அத்தகையோரை கௌரவிக்கும் போது அவர் மகிழ்வதை கண்டு நாமும் மனநிறைவெய்திக் களிக்கிறோம்.

சேவையில் உயர் நிலையில் மதிக்கப்பெறுவது வைத்திய சேவை. அதனை ஆற்ற வாய்ப்புப் பெற்றவர்கள் புண்ணியவான்கள். இவ்வகையில் உயர்வு பெற்றவர் டாக்டர் ஜெயகுலராஜா.

டாக்டர் ஜெயகுலராஜா அவர்கள் நலமே நீடுவாழ்ந்து பல நற்சேவைகளை மேலும் புரிய வேண்டும் என எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவருளை உளமார வேண்டி அவரை மனப்பூர்வமாக ஆசீர்வதிக்கின்றோம்.

— ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
— பரமாசார்ய சுவாமிகள்
[நல்லை குருமகா சந்நிதானம்]

## என்றும் பிறர்க்குரியவர்

அகில இலங்கைக் கம்பன் கழகம் ஆண்டுதோறும் நடத்திவரும் மகரயாழ் விருது வழங்கும் நிகழ்ச்சி இந்த மண்ணின் உயர்ந்த சேவையாளரை இனங்கண்டு அனைவரும் உணர்ந்துகொள்ள ஒரு வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

இவ்வாண்டு இவ்விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் வைத்திய கலாநிதி து. வி. ஜெயகுலராஜா அவர்கள் இவ்விருதுக்கு மிகவும் பொருத்தமானவர் என்ற கருத்தும் பரவலாக எங்கும் நிலவி வருவதை நான் அறிகிறேன்.

தியாக சிந்தனையோடு தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனுமாக வாழ்ந்து வழிகாட்டி வருபவர் இவர்.

கிழக்கு மாகாணமும் கிறிஸ்தவ மதமும் எத்தனையோ தியாகிகளை இந்த மண்ணுக்கு ஈந்துள்ளதை நாம் மறக்க முடியாது.

எனவே இப்பெரியாருக்கு மகரயாழ் விருதை வழங்கிக் கௌரவிக்க முன்வந்த அகில இலங்கைக் கம்பன் கழகத்தைப் பாராட்டுகிறேன்.

அடுத்து இவ்விருதுக்குப் பொருத்தமாக அமைந்த வைத்திய கலாநிதி ஜெயகுலராஜா அவர்களை வாழ்த்துகிறேன்; மண்ணையும் மக்களையும் நேசித்துப் பணியாற்றும் இவருடைய உயர்ந்த உள்ளத்தை மதிக்கிறேன்.

கம்பன் புகழ்பாடி கன்னித் தமிழ் வளர்க்கும் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

— செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
]தலைவர்,தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம்]

## மனித நேயம் மிக்கவர்

மனிதநேயப் பணியில் சிறந்தது மருத்துவப் பணி.

மருத்துவ சேவையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் பெரும்பாலும் மனித நேயமிக்கவர்களாக இருப்பது கண்கூடு.

டாக்டர் ஜெயகுலராஜா இதற்கு விதிவிலக்கானவர் அல்லர்.

இயல்பாகவே சமூகப் பணியில் ஈடுபாடு கொண்டுள்ள அவருக்கு, மருத்துவத்துறையில் சேவையாற்றக் கிடைத்த வாய்ப்பு, பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று.

சமூக சேவையில் தம்மை அர்ப்பணிப்பதில் பெருவிருப்புக் கொண்ட டாக்டர் ஜெயகுலராஜாவை, நலிவுற்றோருக்கு நற்பணியாற்றும் றோட்டறிக் கழகம் ஈர்த்ததில் வியப்பேதுமில்லை.

உலகளாவிய ரீதியில் நற்பணியாற்றும் சர்வதேச அமைப்பான றோட்டறிக் கழகம் இத்தகைய சேவையாளர்களை அரவணைத்து அவர்களின் சமூகப் பணிக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்கு பின்னிற்பதில்லை.

யாழ். றோட்டறிக் கழகத்துடனும் இணைந்து சிறப்புப் பணியாற்றும் டாக்டருக்கு ''மகர யாழ்'' விருது வழங்கப்படுவதையிட்டு புளகாங்கிதம் அடைகிறோம்.

அவர் பணி மேலும் சிறக்க வாழ்த்துகிறோம்.

— ஈ. சரவணபவன்
[தலைவர், யாழ் றோட்டறிக் கழகம்]

## அறப்பேறு சிறப்பேற வாழியவே!

| | | | |
|---|---|---|---|
| திருக்கோயிற் | துரைராச | றோடுமனோன் | மணிசெய்த |
| அருட்பேறே! | ஜெயகுலமே! | அனுதினமும் | நீநினைந்து |
| விருப்போடு | செய்துவந்த | வேண்டுபல | சேவைகளின் |
| பெருககாலே | உனைத்தேர்ந்து | பெரு'மகர | யாழ்'தந்த |
| அறப்பேறு | பெறுகம்பன் | அறக்கோட்டம் | வாழியவே! |
| திறத்தோடு | நின்பணியும் | சிறப்பேற | வாழியவே! |

நயினைக்கவிஞர் நா. க. சண்முகநாதபிள்ளை
[அதிபர் – யாழ். மத்திய கல்லூரி]

## மலர் ஏற்பாடு

★ யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி.
★ நவீல்ட் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலை, கைதடி.
★ யாழ். றோட்டறிக் கழகம்.
★ யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்.
★ யாழ். தனியார் வைத்தியசாலைகள் (ஆனைப்பந்தி)
★ திரு. எம். எஸ். சந்திரபோஸ்
★ சிற்றி மெடிக்கல்ஸ் (நகர மருந்தகம்), 487, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
★ கோப்பாய் பரி. கன்னிமரியாள் ஆலய குருவானவரும் வாலிபர்களும்.
★ யாழ்ப்பாணம் வை. எம். சீ. ஏ.
★ யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம்.
★ திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையம்.

## தன்னலம் நோக்காதவர்

இன்றைய எமது மண்ணின் சமகாலத் தேவைகளில் இன்றியமையாதது புத்திஜீவிகளின் தன்னலமற்ற சேவையே.

இத் தேவையை உணர்ந்து இதற்கே தன்னை அர்ப்பணித்து ''மகர யாழ் விருது'' பெற்றுள்ள டாக்டர் து. வி. ஜெயகுலராஜா அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இவருக்கு இயல்பாகவே இருக்கும் தன்னலம் நோக்கா தாழ்மையுடன் பணிசெய்யும் மனப்பான்மைக்கு கிடைத்ததே ''மகர யாழ்'' விருது எனலாம்.

இவரது பணி தொடர்ந்து சிறப்புற்று பல்வகையிலும் உயர்ச்சிபெற வாழ்த்திநிற்கின்றேன்.

—மேதகு தோமஸ் சௌந்தரநாயகம்ஆண்டகை
[யாழ். ஆயர்]

## வைர நெஞ்சினர்

அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர் இவ் வருடம் மகர யாழ் விருதை வைத்திய கலாநிதி து. வி. ஜெயகுலராஜா அவர்களுக்கு வழங்க முடிவு செய்திருப்பதனையறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன்.

வைத்திய கலாநிதி ஜெயகுலராஜா நமது நாட்டு மக்களின் போராட்டங்களில் — இன்ப துன்பங்களில் — வேதனைகளில் — கலந்துகொண்டு நம்மோடு வாழ்பவர். அவருடைய வாழ்க்கைப்பாதை பலவிதமான அனுபவங்களைக் கொண்டதாக விளங்குகிறது. வைரமுடைய நெஞ்சு அவருக்கு இருக்கின்றது. சலியா உழைப்பு, ஏழை மக்கள் மீது பாசம், இறைவன் மீது குன்றாத நம்பிக்கை எல்லாமே அவரிடம் நிறைந்து காணப்படுகின்றன.

ஏனைய தமிழ் மக்களுடன் சேர்ந்து இந்த மாவீரத் தியாகி நீண்ட காலம் வாழ்ந்து நம் மக்களுக்கு அருஞ்சேவையாற்ற வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

வைத்திய கலாநிதி ஜெயகுலராஜாவிற்கு எனது பாராட்டுதல்கள்; கம்பன் கழகத்தினருக்கு எனது இனிய வாழ்த்துதல்கள்.

— பேராயர் கலாநிதி எஸ் ஜெபநேசன்
[தென்னிந்திய திருச்சபை]

## சாலப் பொருந்தும் விருது

''உன் தாய்த் திருநாடு - தமிழ் ஈழ
மீன் பாடும் தேனாடு,
கூத்தும், கொம்பு விளையாட்டும், கோலாட்டமும்
கும்மியும், குரவையும் கோலோச்சும் நாடு.
உன் ஊர்-தென்னமிளங்கீற்றில்
தென்றல் விளையாடும் திருக்கோவில்.
நீ வளர்ந்த இடம் - சென்னலும், கன்னலும்
நஞ்சையும், புஞ்சையும் சதிராடும் நெற் களங்கள்.
நீ பிறந்த வீடு - வங்கக் கடலலைகள்
வந்து முத்தமிடும் வாசல்.
உன் பெற்றோர் - ஊர் போற்றும்
ஆசிரியத் தம்பதிகள்.
அறப்போரணி தலைவர் ஆர், டப்ளியு. வீ.
அரியநாயகம் உன் சித்தப்பன்.
மருத்துவம் நீ கற்ற பள்ளி - கங்கை நீரோடும்
கண்டி மாநகரம் பல்கலைக்கழகம்.
புகுந்த இடம் - மாவீரர் வன்னியர்கள்
ஆண்ட வளமிக்க முல்லை நகர்.
நீ வாழுமிடம் - தமிழ்த் தமிழர்களின்
தாயகம் - அந்நியரின் ஆதிக்கத்துக்கு அடங்காத
மாவீரர் பலர் துயிலும் யாழ்ப்பாண நந்நகரம்.
செய்த தொண்டோ? எத்தனையோ உண்டு!
''தானைத் தலைவன் பிரபாகரன்'' பின்னே,
சேனைக்குச் சேவை செய்தாய் முன்னவனே
ஏனைச் 'சுகங்கள்' எல்லாம். 'தொண்டுக்கு' முன்னே
'தூசி' என 'வீசி' எறிந்து விட்டவனே!
மருத்துவர்கள் எல்லாம் 'பசுமை இரைதேடி'
ஆலாய் பறக்கின்ற வேளையிலே நீ மட்டும்
ஈழத் தமிழ் மக்கள் விடுங்கண்ணீர் துடைக்கத்
துணிந்து நின்றாய்! இன்று உயர்வடைந்தாய்!
சிறையில் இடப்பட்டாய் - சிங்களக்
காடையர் கையில் அகப்பட்டாய்.
விட்டாரோ? அறுவைச் சிகிச்சை செய்யும்
அற்புதக் கைகளினால், அடித்து, நொறுக்கி
நண்பர் உயிரோடு, உன்னுயிரும் காத்தாயே!
சிறையுடைப்பில் வெளியேறிச் ''சாகாமக்'
காட்டில் தம்பியுடன் தானலைந்தாய்.
'அண்ணன்' பிரபாவின் தம்பியர் துணை கொண்டு
தமிழ் நாடு சென்றடைந்து, சேவை தனைத் தொடர்ந்தாய்!
பிற நாடு பலசென்று பெரும் பொருள் திரட்டி
அகதித் தமிழர்களின் ஆறத் துயர் துடைத்தாய்.
மருத்துவம், கல்வி, விளையாட்டு, சமூகம்
பொருண்மியம், சமயம் - நீ கால்பதித்த துறைகள்.
மக்கள் மனம் கொண்ட மருத்துவனே!
ஜெயகுலராஜாவே! - 'மகரயாழ்' விருது உமக்கு
சாலப் பொருந்தும் ஐயா! தந்தவர்க்கு எம் நன்றி.
தொடரட்டும் உம் தொண்டு, மலரட்டும்
தமிழ் ஈழம், வாழ்க பல்லாண்டு என
நெஞ்சார வாழ்த்துகின்றோம், ''வாழ்த்துகின்றோம்.''

— திருக்கோவில் சின்னத்தம்பி

(விளம்பர இலக்கம்: சி/1149)

## தடைகளை நீக்குமாறு கோருகிறார் வீரக்கோன்

கொழும்பு, மே 5

வடபகுதிமீதான பொருளாதாரத் தடைகளை அரசாங்கம் நீக்க வேண்டும்.

இப்படி லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பட்டி வீரக்கோன் கோரி உள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் தடை செய்துள்ள யூரியா, பற்றறிகள் முதலியவற்றை நம்பி இருக்க இல்லை. அவர்களிடம் குண்டுகள், வெடி மருந்துகள் செய்வதற்கு இவற்றிலும் பார்க்கசிறந்த பொருள்கள் உண்டு எனவும் அவர் கூறினார். (இ-க)

## இன்று

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் ஆதரவில் தொண்டமனாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெற்று வரும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வைத்திய கலாநிதி வி. பாலகிருஷ்ணனின் அசுரர்களை வென்ற குமரன் என்னும் தலைப்பிலான சொற்பொழிவு இடம்பெறும்.

அறிமுகவுரையை திரு. ச. சிவகுருநாதன் வழங்குவார்.

## வடிசாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு பயிர்களுக்கு உரமாகிறது

### இலவசமாக விநியோகம்

யாழ்ப்பாணம், மே. 5

வட மாகாணத்திலுள்ள வடிசாலைகளில் இருந்து வெளியேறும் கழிவான கோடாவை பயிர்களுக்கு பசளையாக பயன்படுத்தும் திட்டம் ஒன்றை விவசாயிகள் செயற்படுத்தி வருகிறார்கள்.

இக்கோடாவை பசளையாக பயன்படுத்திய வயல் நிலங்கள் நல்ல விளைச்சலைத் தந்து[illegible] விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வட மாகாணத்திலுள்ள [illegible] பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிகளின் கீழ் இயங்கும் திக்கம், சங்கானை, வரணி, இளி நொச்சி, புதுக்குடியிருப்பு வடிசாலைகளில் இருந்து வெளியேறும் கோடா கழிவை வடிசாலை நிர்வாகத்தினர் விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகித்து வருகிறார்கள்.

அரசாங்கத்தினால் தடை [illegible] கோடா கழிவு பயிர்களுக்கு நல்ல விளைச்சலைத் தரக்கூடியதாக இருக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-4]

## அகதிகளை வெளியேற்ற ஈரான் முடிவு

தெஹ்ரான் மே 5

ஆப்கானிஸ்தான் யுத்தத்தின் போது ஈரானில் தஞ்சம் அடைந்த சுமார் ஐந்து லட்சம் ஆப்கானிஸ்தான் அகதிகளை வெளியேற்றுவது என்று ஈரான் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (ஒ-க)

புதிய பெரடெனியா இன்ஸ்ரிரியூட்

K. K. S. வீதி, கொக்குவில்.

க. பொ. த. சாதாரண பரீட்சையில் கணிதம் சித்தியடையத் தவறிய மாணவர்களுக்கும் தற்போது க.பொ.த சாதாரணம் கற்கும் மாணவர்களுக்குமான கணித விசேட வகுப்புக்கள்.

இரா. அருட்செல்வம்
சனி, ஞாயிறு 12 - 30 — 1 - 30

சண். வாமதேவன்
சனி, ஞாயிறு 3 - 00 — 4 - 00

தி, சந்திரகுமார்
சனி, ஞாயிறு 8 - 30 — 9 - 30

ஆரம்பம்: 06 - 05 - 1995
[சி-1353]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரம
# திறப்பு விழா

இன்று 05-05-1995 இல் சந்நிதியில் புதிதாக கட்டிய ஆச்சிரமம் 8 மணிக்கும் 10 மணிக்கும் இடைப்பட்ட சுப வேளையில்,

நல்லை ஆதீன முதல்வர்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளால்**
திறந்து வைக்கப்பட்டு அருள் ஆசி வழங்கப்படும்

உயர் திரு. வே. முருகேசு சுவாமி
தலைமையில்

★ மங்கள விளக்கேற்றல்
திரு. சபாபதிப்பிள்ளை தங்கராசா
உடுப்பிட்டி

★ ஆசியுரை
சுவாமி சித்ருபானந்தா

★ சிறப்பு சொற்பொழிவு:
திரு. ஆறு. திருமுருகன்

அன்பர்கள், அடியார்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

— சந்நிதியான் ஆச்சிரமம்.

விளம்பரம் அன்பளிப்பு:
**குகன் ஸ்ருடியோ**

★ திருமேனி அவர்களுக்கு கட்டட வகையால் கடன் இருப்பதால் அதனைச் செலுத்துமுகமாக பொருளுதவி புரிந்து உதவுமாறு அடியார்களை பணிவுடன் வேண்டுகிறேன்.

அ நாகரத்தினம் (குகன்)

[சி-1147]

---

யாழ் உதைபந்தாட்ட சங்கத்தின்
அனுசரணையுடன்
**SAN அன்ரன் ஸ்தாபனத்தின்**
ஆதரவில்
**அமரர் ச. செபஸ்தியாம்பிள்ளை**
**(காணிக்கை)**
ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்திற்காக
நாவாந்துறை
**சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம்**
நடத்தும்
ஒன்பது பேர் கொண்ட விலகல் முறையிலான

# உதைபந்தாட்ட போட்டி

இப்போட்டிகள் நாவாந்துறை சென். மேரிஸ் மைதானத்தில் 30-4-95 பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்ற முதல் ஆட்டத்தை தொடர்ந்து யாழ்ப்பாணத்தின் முன்னணி கழகங்கள் கலந்து கொள்கின்றன.

பரிசு விவரம்:
1 ஆம் பரிசு
வெற்றிக்கேடயம் — 3000/- ரொக்கப்பணம்
2 ஆம் பரிசு:
வெற்றிக்கேடயம் — 2000/- ரொக்கப்பணம்

சிறந்த விளையாட்டுக் கழகத்திற்கும், சிறந்த விளையாட்டு வீரனுக்கும் பரிசுகள் வழங்கப்படும்.

குறிப்பு:
தவிர்க்கமுடியாத காரணங்களால் மறு அறிவித்தல்வரை போட்டிகள் யாவும் பின்போடப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகிறோம்.

சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம்
நாவாந்துறை
(36530)

---

# கீன் கல்வி நிலையம்

பலாலி வீதி, திருநெல்வேலி.

**A/L 97** கலை, வர்த்தகம்

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. S. வரதராஜன் |
| அளவையியல் | — திரு S S மனோகரன் |
| கணக்கியல் | — திரு. சௌந்தி |
| வர்த்தகம் | — திரு வரதன் |
| தமிழ் | — திரு. காரை. S. செங்கா |
| புவியியல் | — திரு சேரன் |
| அரசியல் | — திரு கிருஷ்ணகுமார் |
| இந்து நாகரிகம் / இந்து சமயம் | — திரு. காரை. S. செங்கா |
| நாடகமும் அரங்கியலும் | — பிரபல ஆசிரியர் |

**ஆரம்பம்: 06-05-1995**
சனி 6-15 A. M

குறிப்பு:
மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளதால் அனுமதிகளை முன் கூட்டியே உறுதி செய்து கொள்ளவும்.

[சி-1114] - நிர்வாகி.

---

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

வேலணையூர் "சிவதொண்டன்"
**நாகமுத்து நாகலிங்கம்**

மனிதப் பிறப்பு: 04-02-1921
தெய்வப் பிறப்பு: 05-05-1992

உங்கள் ஆத்மா சாந்தியடைய குலதெய்வங்களைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"சந்தன் கருணை",
வேலணை - 5.

க. கேதீஸ்வரன்
(மருமகன்)
(36525)

---

## ஒன்றுகூடல்

வேலணை, ஊர்காவற்துறைக் கல்விக் கோட்ட சங்கீத ஆசிரியர்களை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சென்ஜோன்ஸ் அக்கடமியில் ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ)

## புலிகளின் குரல் வானொலியில்

**05 - 5 - 1995**
**வெள்ளி இரவு**

★ 8-02 — கலையஞ்சரி— அறிமுகம் — அறிமுகமாவது— கதிர்சரவணபவன் எழுதிய "சுதந்திர வாழ்வின் விடிவலைகள்" கவிதைத்தொகுதி சிறுகதை— வானோசை 4 இல் 3 ஆவது பரிசு பெற்ற இராமநாதன் எழுதிய "பருந்துகள்" கவிதை — க. குலேந்திரன் எழுதிய "மற்றவர் தமிழரை ஆழ்வது கனவே"
★ 8-25 — களப்பொழுது வ. ராஜேஸ் எழுதிய "கப்டன் நேசன்"
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அரசியல் அரங்கம் — வே. பாலகுமாரன் எழுதிய "நந்தவனத்து ஆண்டியும் அவன் போட்டுடைத்த தோண்டியும்"
★ 8-50 — ஏர் முனை — நிகழ்ச்சியில் "கொடித்தோடை" கேள்வி பதில்

**06 — 05 — 1995**
**சனி காலை**

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி

**ஒலிபரப்பு**
**வெள்ளி மாலை**

★ 5-01 — சிந்தனை இதழ்
★ 5-03 — எழுச்சிகீதம்
★ 5-10 புதியவை
★ 5-15 — கனநேரக் காவியங்கள்
★ 5-30 — மண்ணின் குரல்
★ 5-40 — நேயர் கடிதங்கள்
★ 5-45 — வெற்றிச் சுவடுகள்
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 — நாடகம்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — என் தெரிவு

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம் மே 5
வடமராட்சி கிழக்கு, நாகர்கோயில் புனிதசவேரியார் ஆலய வருடாந்த பெருவிழா கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை சனிக்கிழமைமாலை நற்கருணை வழிபாடும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை திருநாள் திருப்பலியும் திருச்சுரூப பவனி, ஆசிர் என்பனவும் இடம்பெறும். [ஐ-14]

★ ★ ★

தென்மராட்சி மே 5
சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

உற்சவ காலத்தில் தினமும் இரவு 7-00 மணிக்கு "சேக்கிழார்கண்ட சிவனடியார்கள்" என்னும் தொடர் விரிவுரையை ஆத்ம ஜோதி நா. முத்தையா நிகழ்த்துவார். [ஐ-14-117]

★ ★ ★

கொக்குவில் கிழக்கு காட்டுப்புலம் ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய கும்பாபிஷேக தின சகஸ்ர மஹா சங்காபிஷேகமும் பூந்தண்டிகை உற்சவமும் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இரவு 7 மணிக்கு சுவாமி வீதியுலா இடம்பெறும். [ஐ-14-15]

## நாளை

யாழ்ப்பாணம், மே 5
வேலணை தொலைக்கல்வி நிலையத்தில் பயிலும் பயிற்சி ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வு ஒன்று நாளை சனிக்கிழமை [illegible] மணிக்கு நிலையத்தில் நடை பெறவுள்ளது. (ஐ-5)

# கம்பன் விழாவின் 2 ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 5
நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்கு வீதியில் அமைக்கப்பட்ட விழாப் பந்தலில் நடைபெறும் அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் பதினைந்தாம் ஆண்டு நிறைவுக் கம்பன் விழாவின் இரண்டாம் நாளான நாளை சனிக்கிழமை காலை நிகழ்ச்சிகள் 9-30 மணிக்கு உடுவில் பிரதி கல்விப் பணிப்பாளர் திரு. இரத்தினராசா தலைமையில் ஆரம்பமாகும்.

காலை நிகழ்வில் சிற்பச் சக்கரவர்த்தி திரு. ஆ. ஜீவரத்தினம் மங்கள விளக்கேற்ற திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் கடவுள் வாழ்த்திசைப்பார்.

தொடக்கவுரையை மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவாவும் வாழ்த்துரையை திரு. செ. சிவமகாராஜாவும் நிகழ்த்துவார்கள். தொடர்ந்து பண்டிதர் க. வீரகத்தி தலைமையில் "சங்கமும் கம்பனும் இயற்கையை கையாண்ட விதம்" என்னும் பொருளில் ஆய்வரங்கு இடம்பெறும். அதில் பண்டிதர் க. சச்சிதானந்தன் ஆய்வுரை வழங்குவார்.

தொடர்ந்து கம்பவாரிதி இ. ஜெயராஜ் நடுவராக கலந்து கொள்ளும் குறள் நெறியில், அயோத்தியா காண்டத்தின் ஊடுபொருளாய் கம்பன் கொண்டது இல்லறச்சிறப்பே: துறவற மேன்மையே, ஊழின் வலியே!, என்ற தலைப்பில் பட்டிமண்டபம் இடம்பெறும்.

மாலை நிகழ்ச்சிகள் வைத்திய கலாநிதி வி. கருணாகரன் தலைமையில் பிற்பகல் 4-30 மணிக்கு ஆரம்பமாகும்.

திரு. சிவஞானம் தம்பதிகள் மங்கள விளக்கேற்றுவர்.

திரு. பி. எஸ். பிச்சைப்பா, ரவி, ரஜிதுழுவினரின் மங்கள இசையும் திருமதி மேரி சரோஜா ஜஸ்ரினின் கடவுள் வாழ்த்தும் தமிழீழக் கல்வி மேம்பாட்டுத் தலைவர் வண பிதா பிரான்சிஸ் யோசெவ் அடிகளின் தொடக்கவுரையும், யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கத்தின் வாழ்த்துரையும் இடம்பெறும். (ஐ 14-111)

## வாகன சாரதிகளுக்கு பயிற்சி

யாழ்ப்பாணம், மே. 5
வாகன சாரதி அனுமதிப் பத்திரம் பெற விண்ணப்பித்த வடமராட்சி, தென்மராட்சி பிரிவுகளைச் சேர்ந்த வாகனச் சாரதிகளுக்கான முதலுதவி மற்றும் வீதிப் போக்குவரத்து பற்றிய பயிற்சி வகுப்புகள் தமிழீழ நிர்வாக சேவையினரால் நடத்தப்படவுள்ளன.

வடமராட்சி பகுதி விண்ணப்பதாரிகளுக்கான பயிற்சி வகுப்புகள் நாளையும், நாளை மறுதினமும் எதிர்வரும் 13 ஆம் 20 ஆம் திகதிகளிலும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணி வரையும்—

தென்மராட்சி பிரிவில் இருந்து விண்ணப்பித்தோருக்கான பயிற்சி வகுப்புகள் இம்மாதம் 14 ஆம், 21 ஆம், 27 ஆம், 28 ஆம் திகதிகளில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும் நடைபெறும்.

இப்பயிற்சி வகுப்புகளில் அனுமதிப்பத்திரம் பெற விரும்பும் ஏனையோரும் பங்குபற்ற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## மகளிர் அமைப்புகளின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 5
வலிகாமம் கோட்டத்தில் உள்ள மகளிர் அமைப்புக்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை பி. ப. 2 மணிக்கு கந்தரோடை மகளிர் மேம்பாட்டு அவை கோட்டச் செயலகத்தில் நடைபெற உள்ளது.

இதில் வலிகாமம் கோட்டத்துக்கு உட்பட்ட ப. நோ. கூ. சங்கங்கள், பனைவள அபிவிருத்திச் சங்கங்கள், சிக்கனக் கடன் வழங்கும் 2 ஆம் படிச் சங்கங்கள், பொது நிர்வாக சேவையின் கீழ் பதியப்பட்ட, பதியப்படாத அனைத்து மாதர், மகளிர் சங்கங்கள், இந்து, உழைக்கும் மகளிர் மன்றங்கள் ஆகியவற்றின் தலைவர்கள், செயலாளர்களை கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மகளிர் மேம்பாட்டு அவையினர் கேட்டுள்ளனர் [ஒ 7]

## சமூக பணியில்...

[3ஆம் பக்கத் தொடர்ச்சி]
யெனப்பட்ட வழியில் — தமது மருத்துவ சேவையின் இலட்சியங்களுக்கு கட்டுப்பட்டு — அவர் ஆற்றிய பணிக்காக ஸ்ரீலங்கா அரசுப்படைகளால் கைது செய்யப்பட்டு வெஞ்சிறையில் அவர் அடைக்கப்பட்டதும் —

வெலிக்கடை படுகொலைகளின் போது தெய்வாதீனமாக அவர் தப்பிப் பிழைத்ததும் —

பின்னர் மட்டக்களப்பு சிறை உடைப்பின் மூலம் விடுவிக்கப்பட்டு, தலைமறைவு வாழ்க்கையின் பின் இந்தியா சென்ற அவர் அங்கு ஈழ விடுதலைக்கும், ஈழ விடுதலை அமைப்புகளின் ஒற்றுமைக்கும் பரந்துபட்ட முறையில் பணி புரிந்ததும் —

இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கவையாகும்.

சமூகப் பணியை மற்றவர்களுடன் — மற்ற அமைப்புகளுடன் — விடுதலை இயக்கங்களுடன் — இணைந்து ஆற்றும் அதேவேளை தனி மனிதன் என்ற முறையில் தனது தனித்துவத்தையும், கௌரவத்தையும் உரிய நெறியில் பேணுவதில் அவர் காட்டும் விட்டுக் கொடுக்காத பாங்கும், அவரது சேவை வாழ்வும் எதிர்கால இளைஞர்களுக்கு சிறந்த முன்மாதிரியாகும்.

பணத்தை எதிர்பாராது சமூக சேவையில் தன்னை ஈடுபடுத்தியுள்ள அத்தகைய ஒருவருக்கு மகாயாழ் விருது [illegible] மூலம் அவருக்கும் பெருமை [illegible] பெருமை.

## ஆசிரியருக்கான பயிலரங்கு

யாழ்ப்பாணம், மே5
ஐக்கிய நாடுகளின் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் இடம்பெயர்ந்த பள்ளி முன்னிலைப் பிள்ளைகளை பராமரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பள்ளி முன்னிலை ஆசிரியர்களுக்கான விசேட பயிலரங்குகள் நாளையும், நாளை மறுதினமும் (6 ஆம், 7ஆம் திகதிகள்) யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் நடைபெறும். (இ—4-7)

## பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், மே. 5
யாழ். பல்கலைக்கழக கலைப்பீட இறுதி ஆண்டு பகுதி III கலைமாணி, வணிகமாணி, தொழில் நிர்வாக மாணி பரீட்சை பெறுபேறுகள் இன்று வெளியிடப்பட உள்ளன. [இ-ஐ-4]

---

**PERSONAL CLASS**
இல, 14,
சிறாம்பையடி லேன்,
யாழ்ப்பாணம்.

**A/L 97**
**கணக்கியல்**
ஆரம்பம்:-
சனி [6. 5. 95]
பி. ப. 4 00 மணி
By:-
A.S.A. கலைச்செல்வன்
[36529]

---

**O/L**
**Day Classes**
பகல் நேர வகுப்புக்கள்
புதிய பிரிவு
**ஆரம்பம்**
இன்று **05-5-95**
8 மணி
கணிதம்-திரு சங்கர்
விஞ்ஞானம்
இரா. செல்வவடிவேல்
ஏனைய பாடங்களும் நடைபெறும்
**புதிய உயர் கல்லூரி**
[illegible]தளம் சந்தி
யாழ்ப்பாணம்
(சி/1359)

---

வலி. மேற்கு செயலக பிரிவில்

## பள்ளி செல்லாத சிறுவர் விவரங்கள் சேகரிப்பு

கல்வி கற்பதற்குரிய வயதை அடைந்த பின்பும் பாடசாலைக்குச் செல்லாமல் இருக்கின்ற சிறார்கள் பற்றிய விவரங்களை திரட்டும் பணியில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை ஈடுபட்டுள்ளது.

5 வயது பூர்த்தியடைந்த பின்னரும் கூட பாடசாலைக்குச் செல்லாமல் இருக்கின்றவர்களின் விவரங்களையும், அவ்வாறு அவர்கள் பாடசாலைக்கு செல்லாமல் இருப்பதற்குரிய காரணங்களையும் சேகரித்து தருமாறு வலி மேற்கு பிரதேச செயலர், அப்பகுதி கிராம சேவகர்களை கேட்டுள்ளார்.

---

**ANNOUNCEMENT**
**St. John's College, Jaffna.**

**OLD BOY'S ASSOCIATION AGM '95**

The Annual General Meeting of the Old Boy's Association will be held on Monday the 22nd of May 1995 at 9-00 a. m in the Jubilee Hall.

Members who wish to Submit Resolutions may do so on or Before 16th. May'95,

Breakfast and Lunch Tickets available at the College.

The programme for the day would be sent by post in due course.

A. J. Kadirgamar,
Hony. Secretary
(36526)

---

அகில இலங்கைக்
**கம்பன் கழகம்**
நடத்திய
அமரர்கள்
**வித்துவான் சி. ஆறுமுகம்,**
**தேவன் - யாழ்ப்பாணம்,**
**வித்துவான் சி. குமாரசாமி**
ஆகியோர் ஞாபகார்த்த
**கவிதை, பேச்சு, கட்டுரைப் போட்டிகளில்**
**தங்கப் பதக்கங்கள் பெறுவோர்**

கவிதைப் போட்டி — 1ம் இடம் — செல்வன் ச. கெங்காதரன்
2ம் இடம் — செல்வி ச. பிரேமினி
2ம் இடம் — செல்வன் வே. தபேந்திரன்

கட்டுரைப் போட்டி — 1ம் இடம் — செல்வன் சி. நந்தகுமார்
2ம் இடம் — செல்வன் யோ. ஜெயக்குமார்
3ம் இடம் — வழங்கப்படவில்லை

பேச்சுப் போட்டி — 1ம் இடம் — செல்வன் ம. பிரவீணன்
2ம் இடம் — செல்வன் ச. லலீசன்
3ம் இடம் — செல்வன் சி. கேசவன்

குறிப்பு:- தங்கப் பதக்கங்கள் பெறுகின்ற மேற் குறிப்பிட்ட போட்டியாளர்கள் இன்று மாலை 4-30 மணிக்கு கம்பன் கோட்டத்திற்கு வருகைதரவும்.

ஆறு. திருமுருகன்
போட்டி இணைப்பாளர்
(சி-1151)

---

யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
**இல்ல மெய்வல்லுநர் போட்டி**

இடம்: யா / யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானம்
காலம்: சனிக்கிழமை (06-05-95)
பி. ப. 1-30 மணி

✶ அன்புடன் அழைக்கின்றோம். ✶

அதிபர்.
[சி-1146]

---

நெஞ்சில் நீங்காத
**நினைவலைகள்**

1ம் ஆண்டு 7ம் ஆண்டு



அமரர்
**மார்க்கண்டு சூசைமுத்து**
மலர்வு: 01-11-1937
உதிர்வு: 05-05-1994



செல்வன்
**சூசைமுத்து யேசுராசா**
மலர்வு: 14-03-1962
உதிர்வு: 15-04-1989

அன்பின் உருவமே பண்பின் பிறப்பிடமே உங்கள் இருவரின் உருவம் காணாது உழலுகிறோம். பாசமுடன் எம்முடனே பழகி வந்த நினைவுகளை நேசமுடன். எந்நாளும் நினைத்து வாடுகின்றோம்.

இவர்களின் ஆன்ம சாந்திக்காக இன்று (05-05-95) வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு நல்லாயன் நிலையத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

யாழ். வளாக வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(36533)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
உற்றார், உறவினர்
நண்பர்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
892/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## சந்திரிகாவும் சாபக்கேடா?

வடக்கு-கிழக்கில் விமான நடவடிக்கைகளுக்கு வெளிநாட்டு நிபுணர்கள் அழைக்கப்படுவர்.

நவீன சாதனங்கள் பொருத்தப்பட்ட "மிக்" விமானங்கள் போன்ற புதிய ரக போர் விமானங்கள் கொள்வனவு செய்யப்பட உள்ளன.

விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கு அமெரிக்க இராணுவ ஆலோசனையைப் பெறுவதற்கு முடிவாகியுள்ளது.

போர் விமானங்கள், போர்க் கப்பல்கள் மட்டுமன்றி நவீன போர்த் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்காக இராணுவ அதிகாரிகள் ரஷ்யா, இஸ்ரேல், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு விரைந்திருக்கிறார்கள்.

உடனடியாகப் பத்தாயிரம் பேரை இராணுவத்தில் சேர்த்துக் கொள்வதற்காக நேர்முகப் பரீட்சைகள் தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த சில நாள்களாக, நாளேடுகளில் வெளிவந்து கொண்டிருக்கும் பரபரப்பான செய்திகளின் தலைப்புகள் இவை.

வடக்கு - கிழக்குப் போரை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை உருவாக்கப் போவதாக முழக்கமிட்டுக் கொண்டு பதவிக்கு வந்த சந்திரிகா அரசாங்கம், இப்போது பெரும் போர் ஒன்றுக்குத் தயாராகின்றது என்பதனை உறுதி செய்யும் தகவல்கள் இவை.

கடந்த பன்னிரண்டு வருடங்களாக விடுதலைப் புலிகளிடம் தோல்வி கண்ட போதெல்லாம் ஒவ்வொரு முறையும் ஸ்ரீலங்கா படை அதிகாரிகளும், அரச அதிகாரிகளும் கூறிவந்த அதே வாசகங்களில் காலத்துக்கு ஏற்றவாறு சில வார்த்தைகள் மாற்றப்பட்டுள்ளன.

ஆகையால் இவை எதுவும் புதியவை அல்ல. ஏற்கனவே ஐ. தே. க. அரச ஆட்சிக் காலத்தில் கேட்ட பழைய பாடல்களே இப்போது புதிய குரல்களில், புதிய தொனிகளில் கேட்கின்றன!

முந்திய அரசாங்கம் பாடல்களைப் பாடியதோடு மட்டுமன்றி அவற்றுக்குச் செயல் வடிவம் கொடுத்தது என்பது எவருக்கும் தெரியும். எனினும் அதனால் போரை முடிவுக்குக் கொண்டுவர முடியவில்லை. அதற்குப் பதிலாக போரின் பரிமாணம் பெரிதாகியது. வருடத்துக்கு வருடம், மாதத்துக்கு மாதம், நாளுக்கு நாள் போர் உத்வேகம் அடைந்தது; உக்கிர நிலைக்கு வந்தது.

அது மட்டுமன்றி எவரும் கற்பனை செய்தும் பார்க்க முடியாதவாறு விடுதலைப் புலிகளும் மிக மிக வேகமாக வளர்ச்சி அடைந்துள்ளனர். மிகப் பலமான, அபார சக்தி கொண்ட ஒரு விடுதலை இயக்கமாக உயர்ந்துள்ளனர்.

ஜனாதிபதிக்குரிய சிங்காசனத்தில் அமர்வதற்கு முன்னர், வெளியே வெறும் எதிர்க்கட்சி அரசியல்வாதியாக இருந்த வேளை, இது அர்த்தமற்ற போராகவும், நாட்டின் பொருளாதாரத்தை விணடிக்கும் யுத்தமாகவும் சந்திரிகாவுக்குத் தெரிந்தது.

ஆனால் அரியணை ஏறியதும், ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி கண்ணே என்று சந்திரிகா தனக்குத் தானே சொல்லிக் கொள்கிறார்.

தமிழ் மக்களிடம் விடுதலைக்கான வேட்கையும், உயிரைக் கொடுத்தும் உரிமைகளைப் பெறுவது என்ற உறுதியும் இருக்கும் வரை — நவீன ஆயுதங்கள் வாங்குவதாலோ, வெளிநாட்டு நிபுணத்துவ உதவி பெறுவதாலோ போரில் வெல்ல முடியாது.

நைஜீரியாவில் நடந்தது போல உணவுப் பொருள்களை அனுப்பாமல் தமிழ் மக்களை சாகடிக்க நினைத்தால் கூட, தமிழ் மக்களின் விடுதலை உணர்வு உக்கிரமடையுமே அன்றி தணிந்து போகாது.

இந்த சின்னக் கணக்குப் புரியாமல் முந்திய சிங்களத் தலைவர்கள் விட்ட தவறை சந்திரிகாவும் இழைத்து தமது நாட்டுக்கு தொடர் சாபக்கேடாக விளங்கப் போகிறாரா?

# கடற்றொழிலாளருக்கு மீண்டும் நிவாரணம் வழங்க நடவடிக்கை

வலிகாமம் மேற்கு, மே 5

கடல் வலயத் தடைச் சட்டம் மீண்டும் அமுலாக்கப்பட்டதைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குரிய நடவடிக்கையை யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் மேற்கொண்டுள்ளார்.

கடல்வலயத்தடை முன்னர் அமுலில் இருந்தபோது பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு வாராந்தம் இலவச உலர்உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது.

பின்னர் கடல் வலயத் தடைச்சட்டம் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து நிவாரணம் நிறுத்தப்பட்டது.

தற்பொழுது மீண்டும் கடல் வலயத் தடைச்சட்டம் அமுலாக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த மீனவர் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கை மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இதற்கு உதவும் வகையில் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு திட்டப்பணிப்பாளர், மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலாளர்களையும் சுற்றுநிருபம் ஒன்றின் மூலம் கேட்டுள்ளார்.

(ஐ-5-175)

## கல்வித்துறைசார் ஊழியர் நலனுக்கு தனியான பிரிவு

கொழும்பு, மே 5

கல்வி சேவையில் ஈடுபட்டுள்ளோருக்கான நிர்வாகப் பிரிவு ஒன்றை அரசு ஆரம்பித்துள்ளது.

கல்வி தொழிலில் ஈடுபட்டுள்ளோரது நலன்களை மேம்படுத்தும் நோக்குடன் கல்வி அமைச்சு இப்பிரிவினை அமைத்துள்ளது.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், கல்விப்பீடங்கள் ஆகியவற்றில் உள்ளவர்கள் மற்றும் கல்வி நிர்வாகச் சேவையைச் சேர்ந்தவர்கள் ஆகியோரின் நீண்டகாலத் தேவையை இதன் மூலம் நிவர்த்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ-5)

## நகரில் நண்பகல் வேளை ஏற்பட்ட களேபரம்!

யாழ்ப்பாணம், மே 5

நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் யாழ். நகரில் பெருங்களேபர நிலை ஏற்பட்டது

குறிப்பிட்ட கடை ஒன்றில் உணவு அருந்திக் கொண்டிருந்தவர்கள் பதற்றத்துடன் வெளியே தலை தெறிக்க ஓடினர். வேலையாட்கள் நிலத்தில் குடபறப்படுத்துக் கொண்டனர்

வீதிகளில் நின்றவர்கள் கூட சிதறி ஓடினர். வேறு சிலர் நிலத்தில் விழுந்து படுத்தனர்.

நடந்தது என்ன?

யாழ் நகரில் உள்ள சாப்பாட்டுக் கடை ஒன்றில் இடி மின்னல் தாக்கியதே இந்தக் களேபரத்துக்கும் காரணமாயிற்று

நகரில் ஷெல் விழுந்து விட்டது என்று எண்ணியே மக்கள் பதற்றம் அடைந்தனர்

கடையின் மின்விநியோக "சுவிச் போட்டில்" மின்னல் தாக்கியதால் பெரும் சத்தத்துடன் அது வெடித்துச் சிதறியது அருகில் இருந்த அலுமாரிக் கண்ணாடிகள் நொறுங்கின. தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை. (ஐ-15)

## 'அவ்ரோ' மீதான தாக்குதல் விசாரிக்க குழு நியமனம்

கொழும்பு, மே 5

கடந்த வெள்ளியன்று "அவ்ரோ" விமானம் விடுதலைப்புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்த மூவர் கொண்ட குழுவை அரசு நியமித்துள்ளது.

குரூப் கப்டன் டொனால்ட் பெரேரா அக்குழுவுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

1992 ஆம் ஆண்டு "வை8" ரக சினச் சகடை விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவம் முதல் விமானங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து இந்தக் குழுவினர் விசாரணை நடத்துவர்.

இதேவேளை - கடந்த மாதம் திருமலைத் துறைமுகத்தினுள் ஊடுருவி கரும்புலிகள் நடத்திய தாக்குதல் குறித்து விசாரிக்க கொமடோர் திலகோர் ஜெலிஸ் தலைமையில மற்றொரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

(ஐ-4)

### தென்மராட்சி இந்து குருமாருக்கு அடையாள அட்டை

தென்மராட்சி மே 5

தென்மராட்சி பிரதேச இந்து கலாசார திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள விசேட அடையாள அட்டைகள் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குவந்து சேர்ந்துள்ளன.

இப்பகுதியில் உள்ள இந்துக் குருமார்கள் பிரதேச செயலகத்தில் உரிய படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து இந்த அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு தென்மராட்சி பிரதேசசெயலர் அறிவித்துள்ளார். (ஐ-117)

### விளையாட்டு நிகழ்வு

கொழும்புத்துறை மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் அதன் ஆண்டு விழாவை ஒட்டி நடத்தும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி கொழும்புத்துறை மேற்கு இந்து மகாவித்தியாலய மைதானத்தில் இன்று பிற்பகல் ஆரம்பமாகவுள்ளது.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3 மணி— அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக 'பி' அணி எதிர் யுத்தாமல் வி. க அணி.

★ பிற்பகல் 3-30 மணி— சென்மேரிஸ் வி. க 'பி' அணி எதிர் கொழும்புத்துறை மேற்கு மகளிர் வி. க "ஏ" அணி

★ பிற்பகல் 4 மணி— சென்றோக்ஸ் வி. க எதிர் வைகிங்ஸ் வி. க. அணி.

# கொழும்பில் கூடுதல் வாடகை செலுத்தி குடியேறுவோர் குறித்து எச்சரிக்கை

### சர்வதேச பயங்கரவாதிகள் ஊடுருவலாமாம்

நேற்று முன்தினம் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் பொலிஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக இணைந்து திடீர் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

வீடுகளில் வேற்று நபர்களை வாடகைக்கு அமர்த்த வேண்டாம் என்று கொழும்பில் உள்ள தமிழ, சிங்கள மற்றும் முஸ்லிம் குடியிருப்பாளர்களுக்கு பொலிஸார் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக கூடுதலாக வாடகை செலுத்தியேனும் வீடுகளை எடுக்க முற்படுவோர் குறித்து மிகக் கவனமாக இருக்கும்படி பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

உள்ளூர் பயங்கரவாதக் குழுக்கள், போதைப்பொருள் கடத்தல் கும்பல்கள் மற்றும் சர்வதேச பயங்கரவாதிகள் இவ்வாறு வந்து நகருக்குள் தங்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கொழும்பில் அண்மையில விடுதலைப் புலிகளைத் தேடி நடத்தப்பட்ட சோதனைகளின் போது போதைப்பொருள் வியாபாரிகள் பலர் பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல் பெரும்புள்ளியான 'குடு ராஜா' என்றழைக்கப்படும் மறைந்த டேலுவின் சகாக்களான இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் கொம்பனித் தெரு பகுதி போதைப் பொருள் தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டனர். (ஐ-5-14)

## அரசமைப்பு சீர்திருத்தம்!

## தெரிவுக்குழு நடவடிக்கை 11ஆம் திகதிமுதல் ஆரம்பம்

கொழும்பு, மே 5

அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழு எதிர்வரும் 11ஆம் திகதி முதல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க உள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், சிங்கள மகா சம்பத பூமி புத்திர ஆகிய கட்சிகள் அன்றைய தினம் தெரிவுக் குழு முன் சாட்சியமளிக்கும்.

ஏனைய கட்சிகளும் பல்வேறு அமைப்புகளும் இது வரையில் தெரிவுக்குழு முன்னிலையில் தோன்றி தமது கருத்துகளைத் தெரிவித்துள்ளன.

மேலும் 700 வரையிலான மனுக்களும் தெரிவுக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்தல், மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் நீதி சேவை, நாடாளுமன்றம் ஆகியவற்றின் சுதந்திரம் மற்றும் தேர்தல் முறை சீர்திருத்தம் ஆகியன பற்றிய பெரும்பான்மையான கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## வாழ்வு மலர திருமுறை

தமிழ் தொன்மையும் நன்மையும் வாய்ந்தது. செந்தமிழால் இறைவனை பாடினார்கள் நிறைமொழி மாந்தர்கள். அவர்கள் தீந்தமிழால் சூட்டிய ஆரங்களே தேவாரங்கள் முதலியவை.

பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினர். பாவை பாடிய வாயால் கோவை பாடுக என்று மணிவாசகரையும் பணித்தார் மணிகண்டன் சிவன். இவை யாவற்றுக்கும் முத்தாய்ப்பாக மூத்த திருப்பதிகத்தை முதலிலே பாடினார் காரைக்காலம்மையார்,

### ஞானக்கதிர்

திருமூலரும் முன்னரே திருமந்திரத்தைப் பாடினார்கள். காதலாகி கசிந்து கண்ணீர் மல்க பொல்லாப் பிள்ளையாரை வழிபட்ட காரணத்தால் வாரணன் அருள் பெற்று இருந்ததால், பெருந்தகை இராஜராஜசோழன், நம்பியாண்டார்நம்பி, துணை கொண்டு. திருமுறைகளைத் தேடி எடுத்து தொகுத்தான்.

சம்பந்தர் தேவாரங்களை முதல் மூன்றாகவும், நாவுக்கரசருடையவை அடுத்த மூன்றாகவும், திருத்தொண்டர் தொகை பாடிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுடையது ஏழாவதாகவும், மணிவாசகர் திருவாசகம் எட்டாவதாகவும், திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பதின்மர் அருளிச் செய்த திருவிசைப்பாவும், அவருட் சேர்ந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு ஆகியவற்றை ஒன்பதாந் திருமுறையாகவும் வகுத்தனர்.

திருமூல நாயனாருடைய திருமந்திரம் பத்தாம் திருமுறையாகவும், திருவாலவாயுடைய சிவபிரான் முதலாயினோர் அருளிச் செய்த திருமுகப்பாசுரம் முதல் திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலை ஈறாம் நாற்பான் பிரபந்தங்களுமாகியவையைப் பதினொராந் திருமுறையாகவும் வகுக்கப்பட்டன.

பின்பு அநபாயன் சோழன் காலத்தில் இறைவனாலேயே 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுக்க சேக்கிழார் பெருமானால் பாடப்பெற்ற திருத்தொண்டர் புராணம் எனும் பெரியபுராணம் பன்னிரண்டாவது திருமுறையாக வகுக்கப்பட்டது.

தேவாரபாசுரங்கள் தெய்வீகத் தன்மை வாய்ந்தவை. "எனதுரை தனதுரையாக நீறணிந்தேறு உகந்தேறிய நிமலன்" எனும் சம்பந்தர் வாக்கால் இறைவன் திருவுளப்படியே தேவார பாசுரங்கள் அருளிச் செய்யப்பட்டன என்பது புலனாகிறது. அதனால்தான் "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்" என்று சுந்தரரும், "ஏழிசையாய் இசைப் பயனாய்" என்றும் புகழ்ந்து மகிழ்ந்தனர்.

திருமுறைப் பாராயணம் சித்தத்தைத் தெளிவிக்கும். சிந்தனையைச் சிவன்பால் ஈர்க்கும். வந்தனையை வளர்க்கும், நிந்தனையைத் தவிர்க்கும், வாழ்வு மலர தாழ்வு தளர திருமுறைகள் ஓதுதல் சாலச் சிறந்ததாகும்.

திருமுறையைப் பெருமறையாகக்கொள்ள வழிபிறக்கின்றது. ஆகவே நாமனைவரும் திருமுறைகளைப் பெருமறைகளாகக் கொண்டு ஓதி உய்வு பெற்று வாழ்க்கை நீதியை உயர்த்துவோமாக.

சைவப்புலவர்
பொன். தெய்வேந்திரன்

★

# கம்பன் விழாவில் பாராட்டுப் பெறும் சான்றோர்

'கம்பனடிப்பொடி' சா. கணேசன் நினைவுப் பரிசிலைப் பெறும்

### மகாவித்துவான் எவ். எக்ஸ். சி. நடராசா



யாழ்ப்பாணம் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டு 1911ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி பிறந்த பிரான்சிஸ் சேவியர் செல்லையா நடராசா மட்டக்களப்பினைத் தமது வாழ்விடமாக வரித்துக் கொண்டவர்.

ஆசிரியராக, அதிபராக, ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராக, அரசகரும மொழிகள் திணைக்கள ஆராய்ச்சி உத்தியோகத்தராக, கலாசாரத் திணைக்கள மொழி பெயர்ப்பு அத்தியட்சகராக தனது சேவையை வழங்கிய இவர் சைவம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்களைச் சார்ந்த இலக்கியம், இலக்கணம் வரலாறு தொடர்பான 21 நூல்களை ஆக்கியுள்ளார்.

எண்ணெய்ச் சிந்து, ஈழமும் தமிழும், இலங்கைச் சரித்திரம், மொழிபெயர்ப்பு மரபு, ஈழத்து நாடோடிப் பாடல்கள், காரைநகர் மான்மியம், கண்ணகி வழக்குரை, மட்டக்களப்பு மான்மியம் போன்ற நூல்களில் மட்டக்களப்பு மான்மியம் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசில் பெற்றது.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நினைவுப் பரிசிலைப் பெறும் சரவெட்டி,

### பண்டிதர் க. வீரகத்தி



சரவெட்டியில் 1922 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 22 ஆம் திகதி பிறந்த இவர் மதுரை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில பண்டிதர் பரீட்சையில் சித்தியெய்தியதோடு ஆசிரியர் பயிற்சி முதனிலைச் சான்றிதழ் பெற்றவரும் ஆவார். இரண்டாந்தர விசேட ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

தமிழ் இலக்கண நுட்பங்களைத் தமக்கேயுரிய சாமர்த்தியத்துடன் கற்பிக்கும் ஆற்றல் மிக்க இவர் அவற்றுக்கான தர்க்க நியாயங்களைக் காட்டி நிறுவும் ஆற்றலும் உடையவர். தமிழக அறிஞர்களால் மதிக்கப்படும ஈழத்து இலக்கண அறிஞர்களுள் தலையானவர்.

இவர் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சிறப்பாய்வாளராக மூன்றாண்டுகள் கடமையாற்றி "ஈழத்து இலக்கணச் சிந்தனைகள்", "பிற்கால இலக்கண மாற்றங்கள்", "எழுத்து" போன்ற விடயங்களில் ஆய்வை மேற்கொண்டார்.

அமரர் கம்பகலாநிதி பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் நினைவுப் பரிசிலைப் பெறும்!

### ஆத்மஜோதி நா. முத்தையா



யாழ்ப்பாணம், ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டு 1918ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி பிறந்த திரு. முத்தையா அவர்கள் பாடசாலைக் கல்வியின் பின் ஆசிரிய தராதரப் பரீட்சையிற் சித்தியெய்தி 1939ஆம் ஆண்டு முதல் நாவலப்பிட்டியில் ஆசிரியராகப் பதவி ஏற்றார். அன்றிலிருந்து 1976 இல் அதிபராக இருந்து ஓய்வு பெறும் வரை அப் பிரதேச மக்களின் கல்வித் தரத்தையும் சைவ நெறியிலமைந்த வாழ்க்கை முறையினையும் மேம்படுத்துவதில் தனது வாழ்வைச் செலவிட்டார்.

1947ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 'ஆத்மஜோதி' எனும் பத்திரிகையில் இந்து சமயத் தத்துவங்களை எளிய கருத்துக்கள், கதைகள் மூலம் தொடர்ந்து வெளியிட்டுச் சமய அறிவை ஊட்டுவதில் பெரும் பங்காற்றினார்.

இவர் 14க்கு மேற்பட்ட ஆன்மீக நூல்களையும் ஆக்கியளித்துள்ளார்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நினைவுப் பரிசிலைப் பெறும்

### பண்டிதர் க. வைத்தீசுவரக் குருக்கள்



காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டு 1916ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி பிறந்த கணபதீசுவரக் குருக்கள் வைத்தீசுவரக் குருக்கள் அவர்கள் பாடசாலைக் கல்வியினை நிறைவு செய்த பின்னர் சுன்னாகம் பிராசீன பாடசாலையிற் சேர்ந்து தமிழை மகாவித்துவான் கணேசையரிடமும், சமஸ்கிருதத்தை, வேத விசாரத சாத்திரிகளிடமும் கற்கும் பேறு பெற்றார்.

அதன் வாயிலாக பாலபண்டிதர் தேர்வில் சித்தியெய்தி பரமேஸ்வரா பண்டித ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து பண்டிதரும் பயிற்சி பெற்ற ஆசிரியரும் ஆகினார்.

ஈழத்துச் சிதம்பர புராணம் முதலான சமய. இலக்கிய, இலக்கண நூல்கள் இவரது ஆக்கங்களாக [illegible] றன இவற்றைவிட சுமார் 15 நூல்களை இவர் [illegible] வழங்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருகோணமலைக் கம்பன் கழகப் புலவர் அமரர் பொ. பொ. சிவசேகரம் நினைவுப் பரிசிலைப் பெறும்

### பண்டிதர் க. வேலுப்பிள்ளை



1921 ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் நாள் யாழ்ப்பாணம் நாவற்குழி கிராமத்தில் பிறந்த க. வேலுப்பிள்ளை நாவற்குழி தப்பையாச் சட்டம்பியாரிடம் குருகுல முறையில் தமிழ் பயின்றதோடு, பாடசாலைக் கல்வியையும் நிறைவு செய்து திருநெல்வேலி சைவாசாரிய பயிற்சிக் கலாசாலையில் பயின்று பயிற்றப்பட்ட தமிழாசிரியரானார்.

இவரது எழுத்தாற்றல் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் பாராட்டைப் பெற்றுக் கொடுத்தது.

உதவி ஆசிரியராக, பாடநூல் ஆக்கக்குழு உறுப்பினராகப் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ள இவர் ஈழத்தில் உருவகக் கதை ஆசிரியர்களில் முன்னோடியாகக் கருதப்படுகிறார்.

[illegible] பிரவேசித்து பல சிறுகதைகளை உருவாக்கியதோடு மாணவர்களுக்கான நாடகங்கள், [illegible] உரைச்சித்திரங்கள் முதலியவற்றையும் படைத்துள்ளார்.

பேராசிரியர் க. கைலாசபதி நினைவுப் பரிசிலைப் பெறும் ஓவியச் சுடர் மணி

### திரு. பி. எஸ். மணியம்



யாழ்ப்பாணம் நல்லூரில் 1923 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி பிறந்த திரு. சுப்பிரமணியம் யாழ். இந்துக்கல்லூரி, சனரத்தினம் ம. ம. வி என்பவற்றின் பழைய மாணவர் ஆவார். இளமையிலேயே ஓவியத்தில் கொண்டிருந்த நாட்டம் சித்திரம் வரைதல் பயிற்சியைத் தூண்டியது. சுயமாகவே விரும்பிய ஒரு வரையும் வண்ணச் சேர்ப்புகளை அவதானித்து பிரயோகிக்கவும் முயன்று வந்தார்.

2ஆம் உலகப் போரின்போது கடற்படையில் பணியாற்றியதோடு, பொது வேலைப் பகுதியில் மேற்பார்வையாளராகவும் பின்னர் பணிபுரிந்தார். அவரது ஓவிய ஆர்வம் அவரை முழுநேர ஓவியனாக்கிற்று.

யாழ்ப்பாணத்தில் பெரியளவில் "போஸ்ரர்" ஒட்டும் முறையையும் பெரியளவில் "பானர்கள்" வைக்கும் முறையையும் முதன் முதலில் இவரே அறிமுகப்படுத்தினார். இவர் 15 ஆயிரத்துக்கு மேலான ஓவியப் படைப்புகளை ஆக்கியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து - விமலானந்தன் (அப்பு)

(இந்திரா நகையகம், யாழ்ப்பாணம்)

வேலணை கிழக்கு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து விமலானந்தன் நேற்று அகால மரணமானார்.

இவர் மாலினிதேவியின் அன்புக் கணவரும், விதுஷா, வினுஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரவணமுத்து - பாக்கியலெட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், பூரணசிங்கம் - மீனாட்சி தம்பதிகளின் (ஆசிரியை, கிளி / இராமநாதபுரம் மகா வித்தியாலயம்) அன்பு மருமகனும், கமலேஸ்வரி, விவேகானந்தன் (கோட்டக் கல்வி அலுவலகம் சங்கானை), விபுலானந்தன் (உரிமையாளர், இந்திரா நகையகம்), யோகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலச்சந்திரன் (ஆசிரியர் வவுனியா), புனிதரேகா, அமிர்தகௌரி, ஜெகதீஸ்வரி, சுரேஸ்குமார், கோணேஸ்வரன், கேதீஸ்வரன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், வினோத், விஜித், விஜய், விதுரா, வித்யா, வினோஜா, சரண்யா, ரக்ஷனா, மயூரி, கஸ்தூரி, கஜானன் ஆகியோரின் சிறிய தந்தையும், பிரசன்னா, பிரவீனா, பிரியதர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் இன்று (5-5-95) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பிறவுண் வீதி, 4 ஆம் இலக்க இல்லத்தில் இருந்து கோம்பயன் மணல் மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. விவேகானந்தன்
(சகோதரர்)

[36532]

### சிவத்திரு சுப்பையாக்குருக்கள் சோமசுந்தரக்குருக்கள்

தம்பலகாமம் பட்டிமேட்டுப் பிள்ளையாரையும், ஆதிகோணநாயகரையும் பக்தியாக பூசனை செய்தவரும், திருமலை ஆலடிப்பிள்ளையாரைப் பக்திபூர்வமாக அர்ச்சித்தவருமான சிவத்திரு சுப்பையாக்குருக்கள் சோமசுந்தரக்குருக்கள் நேற்று திருநகர் - கிளிநொச்சியில் இறையடி சேர்ந்துவிட்டார்

இவர் சிவத்திரு சுப்பையாக்குருக்கள் மாணிக்கம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும், விசாலாட்சி அம்மாவின் அன்புக் கணவரும், சண்முகசுந்தரம் [கிளிநொச்சி], சிவபதமடைந்த பாலசுந்தரம் [திருமலை], திருமதி கமலாம்பிகைஅம்மா பரமசிவநாதன் (ஆனைக்கோட்டை), திருஞானசுந்தரம் (அரணவாய் தெற்கு), சிவபதமடைந்த ஜெயசந்திரன் (வியாபாரிமூலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்

அவரின் இறுதிக் கிரியைகள் திருநகர் கிளிநொச்சியில் உள்ள அவரின் புதல்வரின் இல்லத்தில் இன்று [5-5-95] வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
சோ. சண்முகசுந்தரம்
(மகன்)

கிளிநொச்சி. [36535]

### பரமலிங்கம் சுரேஸ் [ஹொலண்ட்]

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், ஹொலண்டை வசிப்பிடமாகவும் கொண்ட பரமலிங்கம் சுரேஸ் 2-5-95 இல் மாரடைப்பால் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பரமலிங்கம் இராசமலர் தம்பதிகளின் அன்பு மகனும், மகிகையின் அன்புக் கணவரும், சரவணபவன் (இளைப்பாறிய தபாலதிபர்) பரமேஸ்வரி (சரவணை சின்னமடு வித்தியாலயம்) தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமதி சந்திரா பத்மராஜா (வானிலை ஆராய்ச்சி நிலையம் வவுனியா), ரமேஸ் (அரச மரக்கூட்டுத்தாபனம், வவுனியா) குகேஸ் (ஜேர்மனி, கணேஸ் ஹொலண்ட்), சபேஸ் (பொறியியல்பீடம் மொறட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த வாதராஜா
(சகோதரர்)

இருபாலை. [36534]

### சரவணமுத்து பொன்னையா

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் மயிலணியில் வாழ்ந்தவருமான சரவணமுத்து பொன்னையா (முன்னாள் பெருந்தோட்ட லிகிதர்) நேற்று மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பராசக்தியின் அன்புக் கணவரும், கணேசலிங்கம் (யா/ ஏழாலை தெற்கு அ. மி. த. க. பாடசாலை), பாலகுமாரன் (அஞ்சல் அலுவலகம், சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தகப்பனரும், அருந்ததி, பத்மலே சினி ஆகியோரின் மாமனாரும், கோகுலன், சுஜானி, சுகனியா ஆகியோரின் பேரனுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [5-5-95] நண்பகல் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
பிள்ளைகள்

மயிலணி
சுன்னாகம் [36536]

# கொழும்பு நோக்கி வந்த பஸ்ஸில் மிகச் சக்தி வாய்ந்த வெடிமருந்து

## மேதினத்தன்று வெடிக்கவைக்க எடுத்துவரப்பட்டதாம்

கொழும்பு, மே 5

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி வந்த பஸ் ஒன்றில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த 12 கிலோ கிறாம் நிறையுள்ள மிகச் சக்தி வாய்ந்த வெடி மருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பயங்கரமான இந்த வெடி மருந்து கொழும்பில் மேதினத்தன்று பாவிக்க திட்டமிடப்பட்டிருந்தது என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இந்த வெடிப் பொருட்கள் பயன் படுத்தப்பட்டிருந்தால், கொழும்பு நகரின் கணிசமான அளவு பகுதியைத் தகர்த்திருக்கமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளே இந்த வெடி மருந்தை கொண்டு வந்தார்களாம், இத்தகைய சக்தி வாய்ந்த வெடிமருந்தை முதன் முறையாக புலிகள் உபயோகிக்க இருந்தனர் எனவும் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு வந்து கொண்டிருந்த குறிப்பிட்ட பஸ், ஏப்ரல் 29 ஆம்திகதி கொழும்பை வந்தடைய இருந்தது என்றும்—

ஆனால் குருநாகலுக்கு அண்மையில் இந்த பஸ் வீதியைவிட்டு விலகி விபத்துக்கு உள்ளானது என்றும்—

அதனை அடுத்து சந்தேகமுற்ற பொலீஸார் பஸ்ஸை சோதனையிட்ட போதே இந்த வெடிப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

பஸ்ஸின் சாரதி சாமித்தம்பி முருகேசபிள்ளையும் உதவியாளர் கணபதிப்பிள்ளை கோபாலபிள்ளையும் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். (ஒ-5)

### வவுனியா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் சம்பல் தோட்டப் பகுதியில் காணப்பட்ட மற்றைய சடலம் குண்டுகள் சல்லடையாகத் துளைத்து உருக்குலைந்த நிலையில் காணப்பட்டது.

இதற்கிடையில் —

செவ்வாய் இரவு சுட்டுக் கொல்லப்பட்ட மற்றும் ஐந்து பேரின் சடலங்கள் வவுனியா நகரப் பகுதியில் புதனன்று கண்டுபிடிக்கப்பட்டதாக அன்று காலை ஒமந்தைக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

படையினரின் விமானங்கள் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதை அடுத்து எழுந்துள்ள பதற்ற நிலையில் —

இரகசியப் புலனாய்வுப் பிரிவினர் தாம் கைது செய்து வைத்திருந்த சிலரை சுட்டுக் கொன்று சடலங்களைப் போட்டதாகப் பேசப்பட்டது.

சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் வடபகுதி வியாபாரிகள் என்றும் ஒரு செய்தி தெரிவித்தது ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

கண்டுபிடிக்கப்பட்ட சடலங்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

இதேசமயம்

கடந்த செவ்வாய் இரவு வவுனியாவில் உள்ள பல்வேறு முகாம்களின் காவலரண்களில் இருந்தும் விடியும் வரை விடாது துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

#### அநுராதபுரத்தில்

அநுராதபுரம் பகுதியில் தமிழர்கள் தாக்கப்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

பொருள்களை ஏற்றிச் சென்ற சில லொறிகளின் கண்ணாடிகள் நொறுக்கப்பட்டுள்ளன.

சில லொறிகள் வழிமறிக்கப்பட்டு அவற்றின் சாரதிகள், கிளீனர்கள் தாக்கப்பட்டனர்; அவர்கள் மீது அஸிட் வீசப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது (உ-5 9)

### புலிகள்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களுக்கு அவர் பதிலளித்தார்.

"இலங்கையில் கடந்த சில நாட்களாக இடம்பெற்று வரும் சம்பவங்கள் குறித்து சார்க் தலைவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். "சார்க்" நாடுகளுக்கு மட்டுமன்றி ஏனைய நாடுகளுக்கும் அவை கவலையளிப்பனவாக உள்ளன

சிம்லாவில் "சார்க்" தலைவர்கள் ஒன்று கூடிய போது இந்த விடயம் குறித்தும் விரிவாக ஆராய்ந்தனர். எனினும் இப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு கண்டு விடமுடியாது

"இலங்கையில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை காரணமாக ஜனாதிபதி சந்திரிகா அவசரமாக நாடு திரும்பி விட்டார். இதனால் இந்த விவாதத்தில் அவர் பங்குபற்ற முடியவில்லை"— இவ்வாறு பிரதமர் ராவ் மேலும் குறிப்பிட்டதாக அறிவிக்கப்பட்டது. (உ-எ-4-5-6-14)

### இன்றைய கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 5

இன்று 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெற இருந்த மாவட்ட பனை அபிவிருத்தி இணைப்புக் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பின்போடப்பட்டுள்ளது

அடுத்த கூட்டத்துக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என மேலதிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். [இ]

### பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம் மே 5

யுனிசெவ் உதவியுடன் யாழ் மாநகராட்சி மன்றம் நடத்தி வரும் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புக்களின் தொடர் நிகழ்வாக நாளையும், நாளை மறுதினமும் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் விசேட விரிவுரைகள் நடைபெறவுள்ளன.

இந்த விரிவுரைகளில் பிள்ளைகளின் சாதாரண நடத்தைகளை இனம் காணுவது, அவர்களை பராமரிப்பது சம்பந்தமான விடயங்களை வணபிதா. குணசீலனும்—

சிறுவர் உரிமைகளும் எமது சூழலில் அதன் பிரயோகமும் என்பது சம்பந்தமான விடயங்களை யாழ் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரனும்—

பனவெழுச்சி விருத்தி பற்றி கலாநிதி. சபா. ஜெயராஜாவும் எடுத்து விளக்குவர். (ஒ-5)

### இந்தியா விட---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கையைச் சுட்டுக்கொண்ட இந்தியா இனிமேல் நேரடி இராணுவ உதவி வழங்க முன்வராது என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. (உ-4 6)

### தற்கொலைத்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

"மஜிஸ்டிக் சிற்றி" கட்டடத்தொகுதிக்கு அருகே அநாதரவாக விடப்பட்டிருந்த — 17 ஸ்ரீ 1810 இலக்கமுடைய — வெள்ளை நிறக் கார் ஒன்றை பொலிஸார் கண்டுபிடித்ததாகவும் —

வெடிகுண்டுகளைக் கண்டுபிடிக்கும் இராணுவப் பிரிவினர் வந்து சோதனையிட்ட பின்னர் அக்கார் பொலீஸாரினால் கட்டி இழுத்துச் செல்லப்பட்டதாகவும் —

இக்காரின் உரிமையாளரைப் பொலீஸார் தேடி வருவதாகவும் —

கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. [இ-உ]

### தமிழ் நாட்டில் ஹர்த்தால் பஸ்களுக்கு கல்வீச்சு

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா பதவி விலகவேண்டும் என்று கோரி நேற்று தமிழ்நாட்டில் நடைபெற்ற ஹர்த்தால் சில கல்லெறிச் சம்பவங்கள் தவிர அமைதியாக நடந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மாநிலம் முழுவதும் பெரும்பாலான கடைகளும் வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டிருந்தன.

ஒட்டோக்கள், டாக்சிகள், தனியார் பேருந்துகள் ஓடவில்லை.

சென்னையில் இடம்பெற்ற கல்லெறிச் சம்பவங்களில் 25க்கு மேற்பட்ட அரச பேருந்துகள் சேதமடைந்தன.

மாநிலத்தின் பல பகுதிகளிலும் வீதிப் போக்குவரத்தை தடைசெய்ய முயன்ற சட்டமன்ற காங்கிரஸ் - ஐ, திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்கள் உட்பட நூற்றுக்கணக்கான எதிர்க்கட்சித் தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா பதவி விலக வேண்டுமென்று கோரி திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் தோழமைக் கட்சிகளும் இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தன.

காங்கிரஸ் - ஐ கட்சியும் இதற்கு ஆதரவு தெரிவித்திருந்தது. [இ-4]

### வடக்கே கொண்டு செல்ல லொறியில ஏற்றப்பட்ட ரசாயன பொருள்கள் மீட்பு

வட பகுதிக்கு அனுப்புவதற்கு தயார் செய்யப்பட்ட நிலையில் லொறியில் வைக்கப்பட்டிருந்த பயங்கர இரசாயனப் பொருள்களை கொண்ட 30 பரல்களை நேற்று கோட்டைப் பொலீஸார் கைப்பற்றினர் என்று அறிவிக்கப்பட்டது.

ஆட்டுப்பட்டித் தெருவில் கைப்பற்றப்பட்ட இந்த லொறியின் சாரதி மற்றும் உதவியாளரை பொலீஸார் விசாரித்து வருகின்றனர்.

இரசாயனப் பொருள்களின் உரிமையாளர் முகத்துவாரம் பகுதியைச் சேர்ந்த புஷ்பன் அல்லது புஷ்பமலர் என்பவர் என்று விசாரணையின் போது தெரியவந்தது.

பிரஸ்தாப இரசாயன பொருள்கள் கிளிநொச்சியில் உள்ள கடை ஒன்றுக்கு கொண்டு செல்வதற்கு தாங்கள் முயன்றதாக கைதான இருவரும் தெரிவித்தனர். விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. [ஒ-6]

### பாடசாலை அதிபர்கள் கலந்துரையாடல்

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் தொடர்பாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்துள்ள பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல்களில் —

கரவெட்டி கோட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் நெல்லியடி மத்திய கல்லூரியில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கும் —

பருத்தித்துறைக் கோட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நாளை காலை 11 மணிக்கும் —

மருதங்கேணி கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாகர் கோவில் மகாவித்தியாலயத்தில் நாளை பிற்பகல் 3 மணிக்கும் நடைபெறும்.

### மெய்வல்லுநர் போட்டி

சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 1 30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு செ குபேரநாதன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கலந்துகொள்கிறார். (ஒ-7)

### லங்கா முடிதவில் வெளியூர் தபால் பொதிகள்

'லங்கா முடித' கப்பலில் 473 வெளியூர் தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

நீண்ட நாட்களாக கொழும்பில் தேங்கிக் கிடந்த தபால் பொதிகள் அனைத்தும் இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

இக்கப்பலில் இருந்து பொருள்களை இறக்குவது தாமதமாவதால் தபால் பொதிகள் இறக்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும்—

கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்பட ஆரம்பித்ததும் முன்னுரிமை கொடுத்து தபால் பொதிகளை இறக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் யாழ். பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

### சோதிடர் பயிலரங்கு

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் பயிலரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

அன்றைய தினம் "சந்திரஸ்புடமும் அதன் பிரயோகங்களும்" என்னும் விடயம் பற்றிய பயிலரங்கு இடம்பெறும். [ஐ-14]

### பூநகரி---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறோம் என்பதை எமது அரசும், எமது ஜனாதிபதியும் பல தடவை கூறியுள்ளனர். சொல்லப்போனால் போரை விரும்புவது நாங்கள் அல்ல. எமக்குக் கிடைக்கும் எந்த வழிகளில் சமாதானத் தீர்வை தொடர்ந்தும் தேடுவோம். பேச்சுவார்த்தைகள் நாளை தொடங்க முடியுமானால் நாளை பேச்சுவார்த்தைகளைத் தொடங்க நாம் தயார் ஆனால் ஒன்று பேச்சுவார்த்தைகள் தொடங்குவதானால் எதைப்பற்றிப் பேசப்போகிறோம் என்பதைப்பற்றிய தெளிவான புரிந்துணர்வுடன் தான் தொடங்கப்பட வேண்டும். இந்த முழு விடயத்தையும் விடுதலைப் புலிகள் அணுகிய முறையினால் நாம் மிகவும் ஏமாற்றப்பட்டதாக உணர்கிறோம்.

கேள்வி: அப்படியானால் அரசு இராணுவ வழி என்பதை முற்றாக நிராகரித்து விட்டதா?

பதில்: பரவலாகச் சொன்னால் இராணுவ வழி எனும் போது இரு விடயங்கள். ஒன்று நாங்கள் தற்பாதுகாப்புக் கருதிச் செயற்படுவது. அதை செய்யப்போகிறோம். இந்த அடிகளை நாங்கள் வெறுமனே ஒன்றும் செய்யாது ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இந்த விடயத்தில் பதில் நடவடிக்கை அவசியம். அல்லது தேவை எனப் படும்போது நாங்கள் செயற்படுவோம். ஆனால் முழு அளவில போரை பிரகடனப் படுத்தப்போவது நாங்களல்ல ஏனெனில் இந்தத் தகராற்றின் நிரந்தரமான நிலைக்கு நிற்கக்கூடிய இராணுவத் தீர்வு ஒன்று இருக்கும் என நாங்கள் நம்பவில்லை

குறிப்பிட்ட சூழ்நிலையில் போர் அமைதிக்கான வழியாக இருக்கலாம். நாங்கள் தாக்கப்பட்டால் திருப்பித் தாக்கப்போகிறோம்

கேள்வி: அமைதிக்கான பாதையில் அவசியமான கூடுதலான முயற்சி எடுக்கப் போவதாக ஜனாதிபதி கூறினாரே அந்த கூடுதலான முயற்சி எடுக்கப்பட்டு விட்டதா?

பதில்: முதலாவதும், முக்கியமானதும் பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கு விடுதலைப் புலிகள் விதித்துள்ள நிபந்தனைகள் எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை. இவற்றுள் ஒன்று பூநகரி முகாம் அகற்றப்படுவது. அந்த நிபந்தனையை நாம் ஏற்றுக்கொண்டிருந்தால் அது எவ்வளவுக்கு விவேகமற்றது என்பதை ஒரு வாரத்துக்கு முன்னர் நடந்த சம்பவங்கள் காட்டுகின்றன.

இந்த நிபந்தனைகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கான நிபந்தனையாக இருக்கும்வரை பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க முடியும் என நான் நினைக்கவில்லை.

ஆனால் நாங்கள் சமாதான வழிமுறைகளைத் தேடுவோம் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்க என்ன செய்யலாம் என்பது குறித்து எல்லா வகையான ஆலோசனைகளையும் வரவேற்போம். சொல்லப்போனால் நடந்திருப்பது இறுதியான பின்னடைவு என நாங்கள் இப்போது ஏற்றுக்கொள்ளவில்லை. (இ 7)


அகில இலங்கை கம்பன் கழகம்

15 ஆம் ஆண்டு நிறைவு விழாக் காணும் இந் நன்னாளில்

எங்கள் இனிய நல்வாழ்த்துக்கள்!

எஸ்.எம். பேர்னாண்டோ



S.M.FERNANDO

ச/1150


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 293/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 05-05-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.